மழிச்செல்வம்

மாத இதழ்



புரட்டாசி௴

28-8-62 அன்று சென்னை விவசாயத்துறை அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள், நாகலாந்து விவசாய மந்திரி திரு சித்தன் ஜமீர் அவர்களுக்கு பரிசாகப் புத்தகங்கள் வழங்கினர்.



விலை 25 நயா பைசா]

[1962-ம்௵ செப்டம்பர்-அக்டோபர்௴

சென்னை விவசாயத்துறை அமைச்சர், நாகாலாந்து விவசாயத்துறை அமைச்சரை வரவேற்கிறார்.

நாகாலாந்து அபிவிருத்திக்கு சென்னையினின்றும் நிபுணர்களை அனுப்பி தங்கள் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் உதவி செய்யுமாறு திரு சித்தன்ஜமீர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

69669
JL
J.211m, N62
N62.19

விவசாயத்துறை நெறியாளர் திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., அவர்கள், சென்னையின் அனுபவங்களிலிருந்து நாகாலாந்து பலனடையக்கூடிய விஷயங்களை எடுத்துரைக்கிறார்.

உள்ளுறை

பக்கம்.

புஞ்சைக்கு உரமிட ஒரு சுலபமான வழி 5
அமெரிக்க விவசாய விஸ்தரிப்பு 6
வள்ளுவர் காக்கும் பயிர் 8
சிறு ஊட்டகப் பயிர்ச் சத்துக்கள் 10
பருத்தி வாடல் நோய் 12
அக்மார்க் அவசியம் 14
முல்லைச் சாகுபடி குறிப்பு 15
வேளாண்மையில் வேலி 16
அன்றும் இன்றும் 18
புரட்டாசி-ஐப்பசி மாத விவசாயக் குறிப்புகள் 20
கேள்வி அரங்கம் 22
விவசாயிகளுக்கு வேளாண் துறையால் வழங்கப்படும் சில சலுகைகள் 24
நான் கண்ட கம்போஸ்டு 26
வழிகாட்டி (நாடகம்) 28
1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதக் காலநிலை அறிக்கை 31

விளம்பரங்கள் :

பாரீஸ் .. .. -, 23
ராலீஸ் இந்தியா லிட் 7
சூபர் பாஸ்பேட் 11
ரங்கசாமி அண்டு கம்பெனி 13, 30
சூரியன் மார்க் (கலப்பு உரங்கள்) 17
ராஜா பண்ணைத் தோட்டம் 19
ஐ.சி.ஐ. 27

Parry's

பாரியின்

காளான் மருந்துகள்

செடிகளுக்கு எந்த நோயும் வராமல் நம்பகமாகப் பாதுகாக்கும்

பாரீகாப்:

அணுத்துகளாக்கப்பட்ட தாமிர ஆக்ஸிக்ளோரைடு மற்றும் தக்க பொருள்களைக் கூட்டி பல வகை சக்திகளில் பக்குவப் படுத்திய சக்திவாய்நத காளான் மருந்து. ஜலத்தில் கரைத்துத் தெளிக்கும்படி 50% தாமிரம், பாரீகாப்-50 கலந்த பௌடராகவும், எளிதில் தூவும்படி 4% தாமிரம், பாரீகாப்-400 கலந்த பௌடராகவும் கிடைக்கின்றன.

லெய்டோஸால்:

நிலக் காளான்களை ஒழிப்பதற்கான காளான் மருந்து. 3% பாதரஸம் சேர்ந்த பினைல் மெர்க்குரி யூரியா உருவத்தில் கிடைக்கும். கரும்புப் பயிர்களில் பதியன்களை நடுவதற்கு முன்பாக இம்மருந்தைப் பிரயோகித்தால், பயிர் நன்கு முளைக்கவும் நிலக் காளான்களை எதிர்க்கும் சக்தி பெறவும் உதவுகிறது. வெற்றிலைக் கொடிக்கால்களில் தழைக் காளான்களை ஒழிப்பதற்கும் இது நன்கு பயன்படும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

ஈஸ்ட் இந்தியா டிஸ்டிலரீஸ் & ஷுகர் பாக்டரீஸ் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பெர்டிலைசர் இலாகா (ஐ & எப்.) டேர் ஹவுஸ், சென்னை-1.

Z-635TM

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனா
லுழந்தும் உழவே தலை.

மலர் 19 | சுபகிருதுஸு புரட்டாசிமீ—1962–செப்டம்பர்–அக்டோபர் | இதழ் 9

புஞ்சைக்கு உரமிட ஒரு சுலபமான வழி

நம் மாநிலத்தில் பயிராகும் நிலத்தில் 60 சத விகிதத்திற்கு மேல் மானாவாரி பூமியாக உளது. இம் மானாவாரி வயல்கள் சாதாரணமாக உரமிடப்படுவதில்லை. உரமிடுவதன் மூலம் உற்பத்தியை கணிசமான அளவுக்கு அதிகரிக்கலாம். ஆனால் மானாவாரி பூமிக்கு உரமிட போதிய கம்போஸ்டு கிடைப்பதில்லை. இவ்வுர பிரச்னையைத் தீர்க்க சுலபமான வழி, ஐபோமியா (கடல்பாளை) என்னும் பசுந்தாள் உரச் செடியை புஞ்சை வரப் போரங்களில் நட்டு அதன் தழையினின்றும் உரம் தயாரிப்பது. ஒவ்வொரு வயலிலும் இருகுழிகள் (3′ × 5′ × 8′) வெட்டிஅவற்றில், தழைத்த செடியினின்றும் 15 நாட்களுக்கொரு முறை தழையை வெட்டி கம்போஸ்ட் செய்யலாம். இவ்வெளிய முறையை எல்லோரும் கடைப்பிடித்து புஞ்சை வயல் பயிரைச் செழிக்கச் செய்யுங்கள்!

இம்மானாவாரி நில உரப் பிரச்னையை தீர்க்கும் இயக்கத்தை, திட்டக்குழு ஆலோசகர் திரு. எம். எஸ். சிவராமன் அவர்கள் சென்னைக்கருகிலுள்ள சோளங்கிநல்லூரில், ஐபோமியா நட்டு ஆரம்பித்து வைத்தார். அவரும், விவசாயத்துறை நெறியாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் இப்பசுந்தாள் உரச் செடியின் முக்கியத்துவத்தையும், அதனைப் பரப்பும் விதத்தையும் அங்கு குழுமியிருந்தோருக்கு எடுத்துரைத்தனர்.

திரு. எம்.எஸ். சிவராமன், I.C.S. அவர்கள், விவசாயத்துறை நெறியாளர் திரு. வி. கார்த்திகேயன் I.A.S. முதலியோரும் ஐபோமியா நடவில் பங்கெடுத்துக் கொள்கின்றனர் (மேல் படம்).

கிராம மக்கள் தங்கள் தங்கள் வயல்களில் நடுகின்றனர் (கீழ்ப் படம்).

அமெரிக்க விவசாய விஸ்தரிப்பு

[அ. ஜான்நைட், பி.எஸ்ஸி. (ஏஜி.), டி. எச்., எம். எஸ், (கார்னல்), தோட்டக்கலை ஆசிரியர், தே. கல்லுப்பட்டி.]

1900-ம் ஆண்டில் ஒரு அமெரிக்க விவசாயி தன்னைத் தவிர ஆறு நபர்களுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்தார்; 1930-ம் ஆண்டு அதே போலொத்த விவசாயி தன்னைத் தவிர ஒன்பது நபர்களுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்தார்; இப்பொழுதோ 26 நபர்களுக்கு வேண்டிய உணவை ஒரு விவசாயி உற்பத்தி செய்கிறார். இம்முன்னேற்றத்திற்குக் காரணம் அந்நாட்டின் சிறந்த விவசாய விஸ்தரிப்பு முறையே.

நம் நாட்டு விவசாயத்திற்கும், அமெரிக்க விவசாயத்திற்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. நம் நாட்டிலிருக்கும் விவசாயப் பண்ணைகள் சிறிதளவு நிலப்பரப்புடையதாகும். நாளுக்கு நாள் இன்னும் சிறிதாகிக் கொண்டே போகும் தருவாயிலிருக்கின்றன.

ஆனால், அமெரிக்காவிலே சில வருடங்களுக்கு முன் நூற்றுக்கு 85 பேர் விவசாயத்தை அண்டி இருந்த நிலை மாறித் தற்பொழுது நூற்றுக்கு 15 பேர்தான் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் பண்ணைகள் பெரிதாகிக்கொண்டு வருகின்றன.

அமெரிக்க விஸ்தரிப்பு.—அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் காலத்தில் 1862-ம் ஆண்டில் "நிலதான கல்லூரிகள்" (Land Grant Colleges) ஸ்தாபிக்கப்பட்டன. இக் கல்லூரிகளின் முக்கிய நோக்கம் என்னவென்றால், விவசாயிகளுக்கு சாஸ்திரீய விவசாய அறிவையும், வீட்டுப் பொருளாதாரத்தைப் பற்றிய அறிவையும் பரப்புவதேயாகும். இங்கு குறிப்பாக கவனிக்கவேண்டியதாவது, விஞ்ஞான அறிவின் அவசியத்தை விவசாயிகளே உணர்ந்தார்கள். அவர்களின் தலைவர்கள் யாவரும் கூடி விவசாய பிரச்சினைகள் தீர்க்கச் சங்கங்களை ஏற்படுத்தினார்கள். அத்தகைய ஆர்வம் இருந்தபோதிலும் அந்தக் காலத்தில் விவசாய கவுண்டிகாரகர்கள் (County agricultural agents) விவசாயிகளுக்குச் சொன்ன சிபாரிசுகளையும், ஆலோசனைகளையும் விவசாயிகள் எளிதாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் அந்தக் காலத்தில் மக்களின் குறுகிய மனப்பான்மையும், முற்போக்கற்ற எண்ணமுமேயாகும். இப்படிப்பட்ட நிலையை மாற்ற டாக்டர் சீமன் நாப் (Dr. Seaman Knapp) ஒரு உபாயம் செய்தார். இவர் ஒரு விவசாயினுடைய பண்ணையில் திறமையாகச் "செயல் விளக்கம்" ஒன்றை நடத்தினார். அதைக்கண்டதிலிருந்து செயல் விளக்கத்தின் முக்கியத்துவம் அமெரிக்காவில் எங்கும் உணரப்பட்டது. அநேக விவசாயிகள் சாஸ்திரீய முறைச் சாகுபடியை அனுசரித்து நல்ல ஊதியம் பெறலானார்கள்.

நிலதானக் கல்லூரிகளில் புதிதாக விஸ்தரிப்புப் படிப்பு புகுத்தப்பட்டது. அதன் மூலமாக விஸ்தரிப்பு வேலையும், அதனால் ஏற்படுத்திய திட்டங்களும், நல்ல முறையில் தெரியவந்தன. பிறகு சிறுவர்கள், சிறுமிகளுக்கான திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவைகளின் முன்னேற்றத்திற்காக "ஸ்மித்லிவர் சட்டமானது" (Smith Lever Act) 1914-ம் ஆண்டு அமைக்கப் பெற்று "கூட்டுறவு விஸ்தரிப்புப் பணி" (Co-operative Extension Service) என்பது உதித்தது. இப்பணியில் மத்திய அரசாங்கமானது மாகாண அரசாங்கங்களுக்கு பண உதவியளித்து, நிலதானக் கல்லூரிகளின் மூலம் விவசாயிகளுக்கு நவீன சாகுபடி முறைகளைக் கற்பிக்கும் அளவில் உதவி புரிந்தது. இவ்வாறாக கூட்டுறவு விஸ்தரிப்புப் பணியானது, அரசாங்கங்கள், நிலதானக் கல்லூரிகள், விவசாயிகள் என்ற மூன்று பேருடைய ஒத்துழைப்பைக் கொண்டு நடைபெற்று வருகிறது. இப்பொழுது விஸ்தரிப்புப் பணியை நோக்குங்கால் அது சிறந்த முறையிலே வளர்ச்சியடைந்துகொண்டே போவதைக் காணலாம்.

அமெரிக்காவில் கிராமச் சூழ்நிலையுள்ள இடங்கள் உண்டேயொழிய கிராமங்கள் கிடையாது. ஏனென்றால், ஒவ்வொரு விவசாயிக்கும் நூறிலிருந்து நாலாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கரா வரை பரப்புள்ள பண்ணை இருப்பதால் விவசாயினுடைய பண்ணைக்கு செல்லுந்தூரம், மைல்கள் கணக்கிலிருக்கிறது. இத்தகைய பல பண்ணைகள் சேர்ந்து ஒரு 'கௌண்டி' யும் (County), பல கௌண்டிகளைக் கொண்டது ஒரு மாகாணமுமாக இருக்கிறது. ஒரு கௌண்டியை விஸ்தீரணத்தில் ஏறக்குறைய ஒரு தாலூகாவுக்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு கௌண்டியிலும் மூன்று வித கௌண்டிகாரகர்கள் (County agents) உண்டு. ஒன்று, கௌண்டி விவசாயகாரகர் (County agricultural agent) இன்னொருவர் (பெண்) வீட்டுச் செயல்முறைக் காரகர் (Home demonstration agent), மூன்றாமவர், 4—ஹெச் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்குமானகாரகர் (4—H club agent).

கௌண்டியின் நிர்வாகம் கௌண்டியிலிருக்கும் மக்களைக் கொண்டதாகும். நம் நாட்டுக் கிராமப் பஞ்சாயத்தைப் போலுள்ளது. ஆனால், ஒரு பெரிய வேறுபாடு என்னவென்றால், அமெரிக்க மக்களில் படிக்காதவர்களே இல்லையென்று சொல்லும் நிலையில் இருப்பதால், நிர்வாகத்தை சிறந்த குடியரசுக்குரிய முறையில் நடத்த முடிகிறது. மேலும், கௌண்டிக்கு வேண்டிய திட்டங்களை மக்களே வகுக்கும் அறிவும், ஞானமும் உடையவர்களாய் இருப்பதால், மக்களே திட்டங்களை வகுக்கிறார்கள். கௌண்டி

விவசாயக்காரகர் திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசனை கொடுக்கிறாரே ஒழிய திட்டம் மக்கள் திட்டமே. அவர் மக்களுக்கு உதவி புரிய உழைக்கிறாரே தவிர அதிகாரியாக இல்லை. கௌண்டிகாரர்களையும் கௌண்டியிலிருக்கும் மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள். விவசாயக்காரகர் விவசாயக் கல்லூரியில் விவசாயத்தில் பட்டம் பெற்றவராய் இருக்கிறார். வேலையில் இருக்கும்பொழுது, சமீபத்தில் கண்டறிந்த அல்லது வெளியான சாஸ்திரீய முன்னேற்றங்களைப் பற்றி அறிந்துகொள்ளுமாறு, மேல் பயிற்சிக்கு (In-service training) குறுகிய காலத்திற்கு அனுப்பப்படுகிறார். கௌண்டியிலிருக்கும் பிரச்சினைகளுக்கு, குறிப்பிட்ட துறைக்கும் வேண்டிய மேற் பயிற்சிக்காகவும்; விவசாய்க் கல்லூரிக்குக் குறுகிய காலத்திற்கு அனுப்பப்படுகிறார்.

கௌண்டி விவசாயக்காரகர் விவசாயிகளுக்கு விவசாயச் செய்திகளைத் தெரிவிக்கும் முக்கியமான முறைகளாவன.— சுற்றறிவிப்புக் கடிதங்கள் (Circular letters), வானொலி (Radio), மின்சாரத்தால் புகைப்படம் அனுப்பும் கருவி (Television), தொலைபேசி (Telephone), நேரடியாக விவசாயிகளைச் சந்தித்தல் (Personal contact) போன்றவைகளாகும்.

அறுபது வருடங்களுக்குமுன் கௌண்டிகாரகர்களின் ஆலோசனையைக் கேளாது இருந்த நிலை தற்பொழுது முற்றிலும் மாறி, கௌண்டி விவசாயக்காரகர் பேரில் முழு நம்பிக்கையுடையவர்களாய் இருக்கின்றனர். இப்பொழுது தங்கள் நாட்டிற்குப் போதுமான உணவைத் தயாரிப்பதோடு, பிற நாடுகளுக்கும் உதவி செய்யும் அளவில் ஏராளமாக உணவுப் பொருள்களை அனுப்பும் நிலையில் உள்ளனர். அதற்குரிய பெருமை, நுட்ப ஆராய்ச்சியினாலும், அயராத உழைப்பினாலும், அமைக்கப்பட்ட உறுதியான, " விவசாய விஸ்தரிப்புக்கேயாகும் ".

தந்தையைப்போல் தனயன்...



ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான சிலவற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம் மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS TREE BRAND FERTILISERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

RFY-29TAM

வள்ளுவர் காக்கும் பயிர்

[N. சுப்பிரமணியன், B.Sc. (Ag.) விவசாய விளக்குநர், புதுச்சத்திரம், (சேலம்)].

விஞ்ஞானம் வேறு இலக்கியம் வேறு என்று பிரித்துக் கூறுவோர் உண்டு. விஞ்ஞானம் என்பது பல பொருள்களின் தன்மையை உணர்ந்து அதை செயல் முறையாலும் கண்கூடாகச் செய்து அறிந்த உண்மைகளின் கோர்வை. ஆனால் இலக்கியம் என்பது பண்டையர் வாழ்வில் கலந்த கலை, கலாசாரம், நாகரிகம் போன்றவைகளின் பிரதிபலிப்பு ஆகும். வேளாண்மை விஞ்ஞானத்திற்கும் பண்டைத் தமிழ் இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. விவசாயம் நம் நாட்டின் பண்டைத் தொழில் ஆதலால் அது இலக்கியத்தில் இடம் பெற்று தனிப்பட்ட முறையில் சீறும் சிறப்பும் பெற்றுள்ளது.

திருவள்ளுவர் அரசாங்கத்துறையில் பணியாற்றியவர் என்று கூறுவர். அது உண்மை. அத்தோடு அவர் ஒரு வேளாண்மை வல்லுநராகவும் இருந்திருக்கிறார். அதனால் தான் "உழவு" க்கு ஒரு அதிகாரத்தையே பாடியுள்ளார். தொழில்களில் சிறந்தது உழவுத் தொழில். அவர் நெசவாளராக இருந்தார் என்று கூறப்பட்ட போதிலும் உழவுத் தொழிலே சிறந்தது, மேன்மையுடைத்தது என்று பாடியுள்ளார். தலையாய, நிலையான தொழிலும் இதுவே என்று வலியுறுத்துகிறார்.

உழவுத் தொழில் ஒடுங்கின் உலகம் ஒடுங்கிவிடும். அதனுள் இருக்கும் உயிரினம் வாழ்தல் அரிது. வறுமையும் இரத்தலும் மலிவுற்று மனித இனம் துன்புற நேரிடும் என்று இடித்து உணர்த்துகிறார். அதற்குப் பயிர்த் தொழில் எப்படி நடத்தவேண்டும்; எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்று முறையாகக் கூறுவதை யாம் ஆராய்வோம்.

உழவுத் தொழில் செய்யும் முறையை வள்ளுவர் இரண்டு குறட்பாக்களில் வலியுறுத்துகிறார். முதலாவதாக மண்வளம் காத்தல் வேண்டும் என்கிறார். நிலவளம் காக்க அதை உழுதல் அவசியம் என்கிறார். இது யாவரும் அறிந்ததே. ஆனால் எருவிடுதலினும் ஏரடித்தல் மிகச் சிறந்தது என்று வலியுறுத்துகிறார். அவர் சொல்லோவியத்தில்,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்"

என்று வரைந்துள்ளார். அதாவது ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும்படி உழுது காயவிட்டால் பிடி எருவும் இல்லாமல் நிலம் விளையும் என்கிறார். வள்ளுவர் எருவிட வேண்டாம் என்று கூறவில்லை. ஏர் பிடித்து நிலத்தைப் பல தடவை உழவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதற்காக எருவிடுதலை இரண்டாம் தரமாகக் கூறியுள்ளார். இன்று நாம் விஞ்ஞான ரீதியில் காண்பதும் அதுவே யாகும்.

ஆகவே மண்ணை உழுவதற்காக அவர் கூறியபடி ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும்படி செய்ய மண் வெட்டி கண்டோம். மரக்கலப்பை கண்டோம். பின் மண்ணைத் திருப்பி உழும் இரும்புக் கலப்பை கண்டோம். மேடுபள்ளமான தரிசு நிலங்களைச் சமன் செய்ய "புல்டோசர்" போன்ற பெரும் கருவிகளையும் காண்கிறோம். இனிமேல் எப்படிப்பட்ட கருவிகளைக் கண்டாலும் இறுதி முடிவு அவர் கூற்றின்படியே செய்யும் நிலையில் உள்ளோம்.

மண் புழுதியாக மாறிய பிறகு அதைக் காக்கவேண்டும். இல்லையேல் மழை நீர் வெள்ளத்தால் அரிப்பு ஏற்பட்டு புழுதி மண் அடித்துச் செல்லப்படும். மண்ணரிப்பு தடுத்தால்தான், புழுதியான மண் நிலைத்து நிற்கும். மண் மிருதுத் தன்மையும் அடையும். மண் ஈரமும் காக்கப்படும். அதனுள் வாழும் நுண்ணுயிர்ப் பொருள்கள் (Soil fauna)] காக்கப்படுகிறது. காற்றோட்டமும் உண்டாக ஏதுவாகிறது. இவையெல்லாம் இருப்பின் பயிரின் வேர் நிலைத்து, உணவுச் சத்தை உறிஞ்சவும் வழி ஏற்படுகிறது. ஆகவே பயிர் வளம் கொழிக்க மண் வளம் காத்தலே முதற் பயிர்ப்பாதுகாப்பாகும்.

ஏர் உழுது புழுதி காண்பதைச் சிறப்பித்துக் கூறிய வள்ளுவர் அடுத்த குறட்பாவில் வேளாண்மையில் செய்யும் பல வேலைகளை முறையாக கூறுகிறார். இந்த ஒன்றே முக்கால் அடியில் விவசாயத்தையே அடக்கி விடுகிறார். அதையும் அழகாக, பொருள் செறிய

"ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்று கூறியுள்ளார். முதற் குறளில் ஏர் உழுதல் மிக முக்கியம் என்றார். ஆனால் இப் பாடலில் ஏர் உழுதலை விட எரு இடுதல் மிக மிக முக்கியம் என்று வலியுறுத்துகிறார்.

நாம் எருவை நிலத்திற்கேற்ப, நிலத்தில் விளையும் பயிரிற்கேற்ப பல வழிகளில் இடுகிறோம். ஆதிமுதற் கண்டது தொழு உரம். ஆகவே ஆவினத்தை (கால்நடை) பாதுகாத்து அவற்றில் கிடைக்கும் உரத்தை பாதுகாத்து நிலத்தில் இட்டோம். அது போதாமல் ஆடுகளை பட்டியில் அடைத்து நிலவளம் காத்தோம். தேவை பெருகப் பெருக அதுவும் போதாமல் குப்பை கூளங்களை தொழு உரத்தோடு சேர்த்துப் பயன் படுத்தினோம். அத்துடன் நஞ்செய் நிலங்களுக்குப் பசுந்தாள் பயிர் வளர்த்து, அதை உரமாக இட்டு, நிலவளம் காத்துப் பயிர்வளம் காணப் பாடுபடுகிறோம். பசுந்தாள் உரத்தின் நன்மையையும் உணர்ந்திருக்கிறோம்.

இத்துடன் நம் உழவர் விட்டபாடில்லை. வண்டல் மண், குளத்து மண் போன்றவைகளைக் கொணர்ந்து தரக் குறைவான நிலத்தை மேம்படுத்தி பயிர் விளைச்சல் காண்கின்றனர். மேலும் இயற்கையாகக் கிடைக்கும் குப்பை, கூளம்,

பசுந்தழைகள் முதலியவற்றைக்கொண்டு கலவை உர மாக்கி (Compost) நிலத்தில் இட்டு அதிக விளைச்சல் காணப் பாடுபடுகின்றனர்.

மேற்கண்ட இயற்கை உரங்களோடு நில்லாது இரசாயன உரத்தையும் கண்டோம். பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பற்சத்து (N,P,K.) உடைய தனி உரங்களை பயிரின் தன்மைக்கேற்ப நில மகளுக்கு ஊட்டி பயிர் மூலம் விளைச்சல் பேறு காண்கின்றோம். மேற்கண்ட தனிச் செயற்கை உரங்கள் நிலமகளை ஊறு படுத்தாவண்ணம் இரசாயன நிலக்கலவை (Mixed fertilizer) உரங்களை பொருந்தும் விகிதத்தில் தயாரித்து பயிரின் தன்மைக்கேற்ப இடுகிறோம். பலனும் அடைந்து வருகிறோம். ஆகவே எரு வளம் இட்டுப் பயிர்வளம் காக்க வேண்டும் என்று இரண்டாவதாக வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

ஏரையும் எருவையும் ஏற்றிப் போற்றிய வள்ளுவர் அடுத்ததாக ‘‘ கட்டபின் ’’ என்கிறார். அதாவது ஏரையும் எருவையும் விட ‘‘ களை ’’ நீக்குதல் நிலமகளின் கண்ணைக்காத்தல் போன்றதாகும். “களை எறிய நிலம் விளைவு கண்டதில்லை” என்று உணர்ந்த வள்ளுவர் களையைக் காலாகாலத்தில் நீக்கவேண்டும் என்கிறார். களை எடுத்தால் களை ஒழிவது மாத்திரம் அல்ல ; மண்ணும் மிருதுவான தன்மை அடைகிறது. மண்ணின் ஈரம் காக்கப் படுகிறது. மண் இளகினால் வேர் நன்கு ஊன்றி பயிர் ஊட்டம் பெற்று இளை பல கிளைத்துக் கொழிக்கிறது. இக் கருத்தைக்கொண்டுதான் ‘‘ களை ’’ எடுத்தலைப் பற்றி வற்புறுத்துகிறார் போலும்.

நாம் களை எடுத்தலில் கைக் களை, கொத்துக் களை, மண் வெட்டிக் களை, மரக் கலப்பையால் உழுதல் (பயிருழவு) முதலிய முறைகளைக் கண்டோம். தற்பொழுது இடைக்களை நீக்கி, (Intercultivator) ஜூனியர் ஹோ (Junior hoe), போன்ற நவீனக் கருவிகளையும் காண்கிறோம். அத்துடன் களைகளைக் கொல்லும் இரசாயனப் பொருள்களையும் கண்டு அதைப் பயன்படுத்த முயற்சியும் செய்து வருகிறோம். எனவே களையெடுத்தல் மூன்றாவது பயிர்ப் பாதுகாப்பு முறை ஆகும் என்று உணர்த்துகிறார்.

‘‘ நீரின்றி யமையாது உலகு ’’ என்றார் வள்ளுவர். மாரி இல்லையேல் காரியம் இல்லை என்பது மூதுரை மொழி. “மேகம் கடலில் நீரை மொண்டு மழை பெய்யாவிடின் அந்தக் கடலும் வற்றிவிடும்” என்றார் வள்ளுவர். ஆகவே மழையும் நீரும் இல்லையேல் விளை நிலம் ஏது ? மழை நீர் போதாது என்றும், அது சில சமயங்களில் பொய்த்து விடும் என்று கருதி ஆற்றின் குறுக்கே அணைகள் பல கட்டி, அதனின்று கால்வாய்கள் பல வெட்டி பயிர் விளை நிலத்தைப் பரப்பிக்கொண்டிருக்கும் நமது அரசாங்கத்தின் முயற்சி திரு முயற்சியேயாகும். அத்துடன் ஆழக் கிணறுகள் பல தோண்டி நீர்பாசனத்தைப் பரப்புவதில் நம் விவசாயிகளுக்கிணை எங்குள்ளனர் ! ஆகவே காலம் கண்டு, தக்க தருணத்தில் பயிருக்கு நீர் பாய்ச்சுதல் நான்காவது பயிர் பாதுகாப்பாகும்.

மேற்கண்ட நான்கு பாதுகாப்பையும் விட மேன்மை யான, கவனம் செலுத்தவேண்டிய பாதுகாப்பு ஒன்று உண்டு. அதையே ‘‘ நன்றதன் காப்பு ’’ என்றார். அதாவது வித்திட்ட நாள் முதல் விளை பயிர் களம் ஏறும் வரை பயிரைக் கண்ணிமை போல் காத்தல் வேண்டும் என்கிறார். அதனால்தான் ஏர், எரு, களை, நீர் ஆகியவற்றை முறையாகக் கூறி இதனையும் விட பயிர்ப் பாதுகாப்பு மிக முக்கியம் என்று இறுதியில் வலியுறுத்திக் கூறுகிறார்.

கள்வர்களிடமிருந்தும், பறவைகளிடமிருந்தும் பயிர் விளைவைக் காக்க மனிதனின் காவல் தேவை. தினைப்புனத்தில் பரண் ஏறி பறவைகளை விரட்டச் சென்ற குறமகள் கதையிலும் பயிர் பாதுகாப்பின் அவசியத்தைக் காண்கிறோம்.

மேற்கொண்டு எல்லாவற்றிலும் முக்கியமாகப் பயிரைப் பூச்சி, புழுக்கள், பூஞ்சண நோய்கள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பதே மிக அவசியமாகும். இவற்றிற்கும் பயிரைத் தாக்கும் பூச்சிக்கேற்ப, அதன் நிலைக்கேற்ப இரசாயன மருந்துகளை திரவரூபமாகத் தெளித்தும், துகள்களாகத் தூவியும் பயிரைப் பாதுகாத்துப் பேணுகிறோம். பூஞ்சண நோய்களுக்கும் விதையிலிருந்து பயிராகும்வரை பல வகைப்பட்ட பூஞ்சணக் கொல்லிகளை உபயோகித்துப் பயிரைப் பேணுகிறோம்.

ஆகவே திருவள்ளுவர் உழவுத் தொழிலில் ஏரடித்தல், எருவடித்தல், களை நீக்குதல், நீர்பாய்ச்சுதல் முதலியன வற்றை விஞ்ஞான ரீதியாகக் கூறி, இதற்கும் மேம்பட்ட பயிர்ப் பாதுகாப்பையும் வலியுறுத்தியிருக்கிறார்.

மனிதகுலம் இருக்கும்வரை பயிர்க்குலம் இருக்கும். அந்தப் பயிரினத்தைக் காப்பது மனித குலத்தின் கடமை என்று முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த முதல் வேளாண்மைத்துறை நெறியாளர்—அதாவது வள்ளுவர் கூற்றை உணர்ந்து செயலாற்றுவோமாக !

விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

காலநிலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து அன்றாடம் கிடைக்கும் வானிலை அறிக்கையை சென்னை விவசாய இலாகா உடனடியாக ஆராய்ந்து அந்த காலநிலை மாறுபட்டால் பயிரில் தோன்றக்கூடிய பூச்சி பூஞ்சாணங்களையும் அவைகளை தடுக்கும் வழிகளையும் அகில இந்திய ரேடியோவில் விவசாயிகளுக்கு செய்தியாக தினமும் மாலை 6-05 முதல் 6-15 வரையில் பிராந்தியச் செய்தியிலும், மாலை 6-15 முதல் 7-15 வரையில் திருச்சி நிகழ்ச்சியிலும் அறிவிக்கிறார்கள். விவசாய பெருமக்களே இச் செய்தி தங்களுக்கு பயன்படுகிறதா என்றும் அச் செய்தியை இன்னும் எவ்வாறு சீர் திருத்தி அமைக்கலாம் என்றும் தயவுசெய்து கீழ்க் கண்ட விலாசத்திற்கு தெரிவிக்க கோருகிறோம்.

விவசாயச் செய்தி அலுவலர்,
36/பி, மவுண்ட் ரோடு,
சென்னை-2.

சிறு ஊட்டகப் பயிர்ச் சத்துக்கள்

(அ. கோபாலசாமி, இரசாயன உதவி ஆசிரியர், விவசாயக் கல்லூரி, கோவை.)

பயிர்களின் வளர்ச்சிக்கும், மகசூலுக்கும் அத்தியா வசியமான பயிருணவுச் சத்துக்களை அளிக்கும் மூலகங்கள் பல. அவற்றில் கார்பன், ஹைட்ராஜன், ஆக்ஸிஜன் பயிர்களுக்குக் காற்றினின்றும், நீரினின்றும் பெருமளவில் கிடைக்கின்றன. எஞ்சிய மூலகங்களை, பயிருக்குத் தேவைப் படும் அளவைப் பொறுத்து 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

(1) பேரூட்டங்கள் .. தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து.

(2) சிறு ஊட்டகங்கள். கால்சியம், மக்னீசியம், கந்தகம் முதலியன.

3) நுண்ணூட்டகங்கள். இரும்பு, மாங்கனிசம், தாமிரம், போரான், ஜிங்க், மாலிப்டினம் முதலியன.

பேரூட்டகங்கள், நுண்ணூட்டகங்கள்பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆதலால் பேரூட்டகங்களுக்கடுத்த படியாகத் தேவைப்படும் சிறு ஊட்டகங்களின் முக்கியத்துவத்தையும், மகசூலை அதிகரிக்க இவை எவ்வாறு உதவுகின்றன என்பதையும் நாம் இங்கு சிறிது கவனிப்போம்.

சிறு ஊட்டகப் பயிர்ச் சத்துக்கள்—

இவை பயிர்களுக்குச் சிறிய அளவிலேயே தேவைப்படுகின்றன.

கால்சியம் (சுண்ணம்புச் சத்து)—

* சிறு ஊட்டகங்களில் முக்கியமானது கால்சியம்.

* இது ஒரு மண் திருத்தியாகக் (Soil ameliorant) கருதப்படுகிறது.

* கால்சியம் மண்ணின் அமிலத்தன்மையைக் குறைத்து பாக்டீரியாக்களின் கிரியைகளை ஊக்குவிக்கிறது.

* செடிகளில், உறுதியான செல் சுவர்களின் வளர்ச்சிக்கும், மாவுச்சத்து செடியின் ஒரு பாகத்திலிருந்து மற்ற பாகங்களுக் கெடுத்துச் செல்லப்படுவதற்கும் தேவைப்படுகிறது.

குறைவின் அறிகுறிகள்—

(1) செடி வளர்ச்சி குன்றுதல்.

(2) படரும் வேரிழைகள் உலர்ந்து விடுதல்.

(3) மொட்டுக்கள் பட்டுப் போதல்.

மண்ணரிப்பினாலும், நீரில் கரைவதாலும் மண்ணிலிருந்து இச்சத்து நீக்கப்படும் ஒரு சில இடங்களைத் தவிர, அதிருஷ்டவசமாக மற்ற இடங்களில் இச்சத்தின் குறைவு காணப்படுவதில்லை. இச்சத்துக் குறைவுள்ள இடங்களில் ஜிப்சம் உப்பு இடுவதன் மூலம் தேவையான அளவு இச்சத்தை நிலத்திற்கு அளிக்கலாம். 2 முதல் 3 ஆண்டுக்கு ஒரு முறை சுண்ணம்பிட வேண்டும். நடவிற்கும் உரமிடுவதற்கும் வெகு நாட்களுக்கு முன் கூட்டியே நிலத்திற்கு சுண்ணம்பிட வேண்டும். அளவுக்கு மிகுதியாக இச்சத்திட்டால், பாஸ்பரஸ், மாங்கனீசு, இரும்பு போன்ற சத்துக்கள் செடிகளினால் கிரகிக்கப்படுவது பாதிக்கப்படுகிறது.

கரிசல் நிலத்தில் களர்த் தன்மையைத் திருத்துவதற்கு இச் சுண்ணம்புச் சத்துள்ள "ஜிப்சம்" பெருமளவில் உபயோகப்படுத்தப்படுகிறது.

மக்னீசியம்—

* மக்னீசியம் தாவரப் பச்சையத்தின் (Chlorophyll) ஒரு பகுதியாக விளங்குவதால் இது பயிர்களுக்கு அத்தியாவசியம்.

* செடிகளில் சர்க்கரைச் சத்து ஒரு பாகத்திலிருந்து மற்ற பாகங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கும், செடிகளில் எண்ணெய், கொழுப்பு சம்பந்தமான பொருள்கள் உண்டாவதற்கும் மக்னீசியம் தேவைப்படுகிறது.

குறைவின் அறிகுறிகள்—

மக்னீசியத்தின் குறைவை இலைகளில் பலவித நிற மாற்றங்களால் கண்டு பிடிக்கலாம்.

(1) புகையிலையில் இதன் குறைவு "சான்ட் ட்ரவுண்" (Sand drown) எனப்படும். இலைகளில் "பச்சையின்மை" (Chlorosis) நிலையை ஏற்படுத்துகிறது.

(2) பருத்தியில் நரம்புகளைத் தவிர மற்ற பாகங்கள் இளஞ் சிவப்பு நிறமாக மாறுகிறது.

(3) சோளப் பயிரில் இலை நீளவாட்டில் தனித்தனியாகக் கிழிந்து, இளஞ்சிவப்பு நிறத்தை அடைகிறது.

(4) உருளைக் கிழங்கில் பற்றுக்குறை நோயையும் (Potato sickness),

(5) எலுமிச்சை வகைகளில் "பிரான்ஜிங்" (Bronzing) என்ற நிலையையும் ஏற்படுத்துகிறது.

மிகுந்த மழை பெய்யும் இளகிய மண்ணுள்ள இடங்களில் மக்னீசியத்தின் குறைவு காணப்படும். கால்சியமும் பொட்டாசியமும் மிகுதியாகக் காணப்படும் மண்ணில் மக்னீசியத்தின் கிட்டும் தன்மை குறையும். சீரான பயிர் வளர்ச்சிக்கு மண்ணில் கால்சியமும் மக்னீசியமும் 2 : 1 என்ற விகிதத்தில் அமைந்திருக்க வேண்டும். மக்னீசயம் சல்பேட், மற்றும் இம்மூலகத்தைக் கொண்டுள்ள உரங்களால், மக்னீசயக் குறைவை நிவர்த்திக்கலாம்.

கந்தகம்—

* கந்தகம் தாவரங்களிலுள்ள புரதச் சத்துக்களின் ஒரு பகுதியாக விளங்குகிறது.

* வேர், வேர் முடிச்சுக்களின் வளர்ச்சியை அதிகப்படுத்துதல், பச்சையம் உண்டாக்குதல், கடுகு, வெங்காயம், பூண்டு ஆகியவற்றின் எண்ணெய்ப் பொருள்கள் கூட்டுச் சேர்க்கையில் உண்டாவதற்கும் இம்மூலகம் தேவைப்படுகிறது.

* கந்தகம் மண்ணில் அமில நிலையை உண்டாக்கும் தன்மையைத் திருத்த உதவுகிறது.

குறைவின் அறிகுறிகள்—

தழைச் சத்துக் குறைவின் அறிகுறிகளை ஒத்தது. அதாவது இலைகளில் பச்சைத் தன்மை குறைந்து வெளுத்து, பயிர்களின் வளர்ச்சி குறைதல் முதலியன. தேயிலை, ஆரஞ்சு, புகையிலை ஆகிய பயிர்களில் சாதாரணமாக இச்சத்தின் குறைபாட்டைக் காணலாம்.

நாம் சாதாரணமாக பயிர்களுக்கு இடும் அம்மோனியம் சல்பேட், சூப்பர் போன்ற உரங்களில் அடங்கியுள்ள இந்த தாதுப்பொருளின் மூலம் இதன் குறைவை நிவர்த்திக்கலாம்.

ஆகவே, இச்சிறு ஊட்டகங்களும் பயிர் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை என்பதை விவசாயிகள் உணர்ந்து இச்சத்துக்களின் குறைபாட்டை நிவர்த்திக்கத் தக்க முறைகளைக் கையாண்டு, தங்கள் பண்ணை வருவாயையும், நாட்டின் உணவு உற்பத்தியையும் பெருக்குவார்களாக.

சூபர்பாஸ்பேட்

விவசாயி என்ற முறையில் நீங்கள் ஒவ்வொரு ஏகரிலும் அதிக விளைச்சல் பெறவும், நெல்லின் தரத்தை உயர்த்தவும் மண்வளம் சீராக இருப்பதற்கும் விரும்புவீர்கள். உங்கள் வயல்களுக்கு நைட்ரஜன் உரத்துடன் சூபர்பாஸ்பேட உரத்தையும் போட்டால் இது சாத்யம்; சிக்கனமும் கூட

சூபர்பாஸ்பேட பயிர் வளர்ச்சிக்கு அத்யாவசியமான இணையற்ற. பாஸ்பேட் உரமாகும். தென் இந்தியாவில் பல சோதனைகள் நடத்தியதில், ஒவ்வொரு ஏகர் நிலத்திற்கும் நைட்ரஜன் உரத்துடன் 86 கிலோக்ராம் சூபர்பாஸ்பேட் சேர்த்து உபயோகித்தால் 114 கிலோக்ராம் அதிக நெல் விளைச்சல் கிடைக்கிறது என்று தெரிகிறது. நில வளத்திற்கு இன்றியமையாதது சூபர்பாஸ்பேட்.

உங்கள் வயலுக்கு தேவையானது

சூபர்பாஸ்பேட்

முழு விபரங்களுக்கு

தென் பிராந்திய மண்டலக்குழு

இந்திய உரச்சங்கம், தபால் பெட்டி 12, சென்னை-1

FDS/FA/8A-TM

பருத்தி வாடல் நோய் (COTTON WILT)

(பூ. பாலின் கொர்நேலியஸ்)

நம் நாட்டில் தற்பொழுது 11·5 இலட்சம் எக்கர் நிலத்தில் பருத்தி விளைவிக்கப்பட்டு வருகிறது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் அதன் விளைச்சலை 4·2 இலட்சம் பேல்லிலிருந்து 5·2 இலட்சம் பேல்ஸாக உயர்த்தப் பாடுபடுவதற்குக் காரணம் அது ஒரு பணந்தரும் பயிர் என்பது மட்டுமல்ல; அதனால் நாட்டுப் பொருளாதாரமும் உயரும் என்பது ஒரு காரணமாகும்.

வாடல் நோய்.—பருத்தியில் மானவாரிப்பயிர் (கருங்கண்ணி), இறைவைப்பயிர் (கம்போடியா) என இருவகை இருப்பது அனைவரும் அறிந்ததே. இதில் கருங்கண்ணியைத் தாக்கும் முக்கிய நோய்களுள் பருத்தி வாடல் நோயும் ஒன்று. அதைப்பற்றி ஈண்டு சிறிது கவனிப்போம். பருத்தி பயிரிடும் நாடான அமெரிக்காவில் முதன் முதலில் தோன்றிய இந்நோய் ஆப்பிரிக்கா, எகிப்து, இந்தியா ஆகிய மற்ற நாடுகளுக்கும் நாளடைவில் பரவியது. நம் நாட்டிலும் இந்நோய் பெருந்தொல்லையை விளைவிக்கிறது. தமிழ்நாட்டில் முக்கியமாக கோயம்புத்தூரில் இந்நோய் பரவலாகக் காணப்படுகிறது.

காரணகர்த்தா.—இந்நோய் ப்யூசேரியம் வாஸின் பெக்டம் (Fusarium vasin fectum) என்னும் ஒருவகைப் பூஞ்சணத்தால் உண்டாகிறது. நம் நாட்டில் பொதுவாக இது களிமண் மிகுந்த களர்நிலத்தில்தான் தோன்றுகிறது. பொதுவாக மண்ணில் இறந்து அழுகியப் பொருட்களில் இது செழித்து வளருகிறது. இந்நோயுண்ணி சமயம் கிடைக்கும்போது வளரும் பருத்திகளையும் தாக்கத் தயங்குவதில்லை. மண்ணுக்கடியில் சிறு வேர்கள் மூலம் செடியின் உள்ளே புகும் இப்பூஞ்சாணம், செடியில் உணவுப் பொருட்களை மேலேற்றும நுண்ணிய குழாய்களை அடைத்துவிடுகிறது. வேரினின்று மேல் நோக்கி செல்லும் வழி அடைபட்டால் செடிக்கு போஷிப்பு ஏது? போஷிப்பு இல்லையெனில் செடி செழிப்பதெப்படி?

நோயின் அறிகுறியும், ஏற்படும் சேதமும்.—நோயினால் தாக்கப்பட்ட செடியின் இலைகள் மஞ்சளாகிப் பிறகு செம்பழுப்பு நிறமாக மாறி, வாடிச் செடியிலிருந்து உதிர்ந்துவிடுகின்றன. சில வேளைகளில் இலைகள் முழுவதும் இவ்வாறு காய்ந்து உதிர்ந்துக் கடைசியில் வெறுமையானக் குச்சிகள் மட்டும் வயலில் காட்சியளிக்கும். நோயினால் அதிகமாகத் தாக்கப்பட்டச் செடிகளில் வேரின் பட்டையை உரித்துப் பார்த்தால், அப்பட்டையின் அடியிலுள்ள திசுக்களில் பட்டைபட்டையாக கருமை நிறம் காணப்படுவது தெரியும். இதன் மூலம் நோயால் பீடிக்கப்பட்ட பயிரை எளிதில் கண்டறியலாம். மேலும் இந்நோயினால் தாக்கப்பட்டு வளர்ச்சி குன்றிய செடிகளே சீக்கிரம் காய்க்க ஆரம்பிக்கின்றன. காய்களும் முற்றுவதற்கு முன்பே வெடிக்க ஆரம்பிக்கின்றன. எனவே, பஞ்சின் தரமும் குறைகிறது. மேலும் விதைகள் தாக்கப்படும் போது, அவை திரும்ப முளைப்பதில்லை. இந்நோய் மிக மெதுவாகப் பரவுகிறது. என்றாலும் ஓர் நீண்டகால வெப்பத்திற்குப்பின் பெய்யும் மழை, இந்நோயை மிகத் துரிதப்படுத்தி பரவச் செய்கிறது. இப் பூஞ்சணத்தின் உறுப்புகள், காற்று, மழை, நீர்ப்பாசனம் ஆகியவற்றினால் அடித்துச் செல்லப்படுவதின் மூலம் இந்நோய் பரவுகிறது.

தடுப்பு முறை.—

(1) பருத்திச் செடியை வெகு அருகில் அதாவது இடைவெளியை சற்று குறைத்து பயிர் செய்வதின்மூலம் செடிகளுக்குப் போதுமான நிழல் கிடைக்க வழியுண்டு. இதனால் மண்ணின் உஷ்ண நிலையும் குறைகின்றது. உஷ்ணநிலை அதிகமாகக் குறையுமானால் (20°C-க்குக்கீழ்) நோயின் வியாபகம் குறைகிறது.

(2) கால்நடை உரத்தை எக்கர் ஒன்றுக்கு 40 டன் வீதம் நிலத்திற்குப் போடுவதின் மூலமோ அல்லது பசுந்தழை உரங்களை 5,000–10,000 ராத்தல் வீதம் போடுவதின் மூலமோ பயிரின் பிற்காலத்தில் இந்நோயின் தொல்லையை ஒழிக்கலாம்.

(3) போதுமான அளவு பொட்டாஷ் கொண்ட கலப்பு உரத்தையும் (நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்பரக் கலப்பு உரம்) அளிப்பதின் மூலம் இந்நோயினால் உண்டாகும் நட்டத்தை ஈடுசெய்யலாம்.

(4) கோடை காலத்தில் இறந்து அழுகியப் பொருட்களை ஒன்றும் இல்லாதவாறு அப்புறப்படுத்தியபின் நிலத்தை தரிசாகப் போட்டு வைக்கலாம்.

(5) இப்பூஞ்சணத்துடன் மிக நெருங்கியத் தொடர்பு கொண்டு வாழும் மற்றொரு நோயுண்ணி, நிமடோட் (Nematode) என்னும் வேர்ப்பூச்சியாகும். பருத்திச் செடியின் வேரில் வாழ்ந்துவரும் இப்பூச்சி, வேரில் துவாரங்களை எற்படுத்துகிறது. இத்துவாரங்கள் பூஞ்சணம் உட்செல்வதற்கு ஒரு நல்ல வாசலாக அமைகிறது. எனவே நோயைச் சிறந்த முறையில் தடுக்க வேண்டுமானால் முதலில் இந்த வேர்ப்பூச்சியை, பயிற்சுழற்சி மூலமோ, பூச்சி கொல்லி மருந்தினால் புகை போடுதல் (Fumigation) மூலமோ ஒழித்துக்கட்டவேண்டும்.

(6) மேலும் 'செஷன்ட்' கலவை அல்லது 0·1 சத வீதம்—0·2 சதவீத 'வெட் செரசான்' (Wet Ceresan) மூலம் நிலத்தை நனைக்கவேண்டும்.

(7) எல்லாவற்றிற்கும் மேலாக, இப்பூஞ்சணத்தின் தாக்குதலை எதிர்க்கும் பொறுக்குவிதைப் பருத்தி ரகங்களைப் பயிரிட்டு நல்ல பலனைப் பெறலாம். ஹெர்பேசியம் வகைப் பருத்திகளான ஜயவந்த், ஜயடார் (கருநாடகம்), விஜய் (புரோச், பரோடா), வீரம் பி.டி. 8-ம், ஆர்போரியம் பருத்தி வகைகளான கல்யாண் (வடகுஜராத்), ப்ரதாப், ஜரிலா-ம் இப்பூஞ்சணத்தின் தாக்குதலை எதிர்க்கும் பருத்தி ரகங்களாகும். மேலும், இனவிருத்திக்கான தொழிற்கலை (Breeding technique) மூலம் நல்ல ரகப் பருத்தி பல கண்டுபிடிக்க இன்னும் ஆராய்ச்சி பல தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பூச்சி, பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி

தூவானம் செய்ய



இந்த எல்லா ஸ்பிரேயர்களும் மானியத் திட்டத்தின்கீழ் வழங்க, தமிழ்நாடு விவசாய இலாகா நெறியாளரால் ‘ரேட் காண்ட்ராக்ட்’ திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்டவை. உங்கள் வட்டார விவசாய விளக்குனர் மூலமாகவோ, விவசாய வளர்ச்சி அதிகாரி மூலமாகவோ இந்த ஸ்ப்ரேயர்களை நீங்கள் பெறலாம்.



கேடார்
அசைப்பு ஸ்ப்ரேயர்

200 ராத்தல் அழுத்த சக்தியுடன் ஒரே மாதிரியாகத் தொடர்ந்து தூவாணம் செய்யும்.

மூன்று விதங்களில் தூவானம் செய்யும் ஹை-ட்ரீலான்சுடன்கூடிய கேட்டார் அசைப்பு ஸ்பிரேயர்

எல்லா மரங்களுக்கும், நிலக்கடலை, தோட்டப் பயிர்களுக்கும் உபயோகியுங்கள்.



கையாலும், சக்தியாலும் இயக்கும்
இதர பல ஸ்ப்ரேயர்களும்,
டஸ்டர்களும் நாங்கள்
தயாரிக்கிறோம்.



மாருத்
கையழுத்த ஸ்ப்ரேயர்

நாற்றங்காலிலும், விளைநிலப் பயிர்களிலும், பூச்சி பூசண நோய்களைக் கட்டுப்படுத்தத் தகுந்தது.

மற்ற விபரங்களுக்கு
கீழே கண்ட
விலாசங்களில் விசாரியுங்கள் :

அசைப்பு ஸ்ப்ரேயர்
கேடார்-கோ.ஃ.பி

பாக்கு, தென்னை மரங்களுக்கு உபரோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்

போன் எண்கள் { 84221, 84245

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

தந்தி : கில்லோகஸ்ட் மலாடு.

மலாடு—பம்பாய் 64.

ஏஜெண்டுகள் :

ரங்கஸ்வாமி அண்டு கோ.,

03, ஸ்ரீ நரசிம்மராஜா ரோடு, பெங்களூர்-2, மைசூர் ராஜ்யம்.
தந்தி : ஹோன்விட் போன் : 2971.

அக்மார்க் அவசியம்

[T. வேலு, B.Sc., (Ag.) மாநில வர்த்தக பிரிவு, சென்னை.]

மின்னுவது எல்லாம் பொன்னல்ல என்னும் பழமொழி பொன்னுக்கு மட்டுமல்லாமல் நம்முடைய உபயோகத்திற்காக தயாரிக்கப்படும் எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும். கடையில் விற்கப்படும் பொருள்கள் அனைத்தும் தூய்மையும், பரிசுத்தமும் கொண்டவைகள், வாங்கி உபயோகிக்கத் தகுந்தவைகள் என்று கூறிவிட முடியாது. இயற்கைப் பொருளேயானாலும், தயாரித்தப் பொருள்களேயானாலும் பலவிதத் தரத்துடனும் வேறுபாடுகளுடனும் கிடைக்கிறது. இதனோடு நல்ல பொருள்களோடு கெட்டப் பொருளையும், மலிவானதோடு கிராக்கியானதையும், தரம் குறைந்ததோடு தரம் கொண்டவைகளையும் கலந்து வர்த்தகமிடுவதால் நல்ல பொருள்களாக வாங்குவது பெரிதும் கடினமாகியுள்ளது.

பொருள்களின் தூய்மை அனுசரிக்கப்பட வேண்டும், குணம்சங்கள் கெடாமலிருக்கச் செய்ய வேண்டும். கௌரவம் காப்பற்றப்பட வேண்டும். இதற்கெல்லாம் சாதகமாக 1937-ஆம் ஆண்டின் விளைபொருள் வர்த்தகமிடல் சட்டம் (தரமிடல், குறியிடல்) வந்தது. இம்மத்திய அரசாங்க சட்டப்படி விளைபொருள் வர்த்தக ஆலோசகருக்கு பல்வேறு விளைபொருள்களையும், கால்நடைப் பண்ணைப் பொருள்களையும் சோதனையிட்டு பொருள்களுக்கேற்ற படித் தரத்தினை வகுக்க அதிகாரம் வழங்கப்பட்டது. இவ்விதமாக 115 ஏற்றுமதிப் பொருள்களுக்கும் உள்நாட்டு உபயோகப்பொருள்களுக்கும் தரங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வெண்ணெய், நெய், நல்லெண்ணெய், அரிசி, கரும்பு, வெல்லம், முட்டை, உருளைக் கிழங்கு முதலியவைகளுக்குத் தரங்கள் உள்ளன. மத்திய விளைபொருள் வர்த்தக ஆலோசகர் கிடைத்த மனுக்களின் பேரில் தகுதி கொண்ட பொருட்களை தரம் பிரித்து "அக்மார்க்" (Agmark) என வரையப்பட்ட முத்திரைகளை ஏனங்களில் ஒட்ட அதிகாரம் வழங்குகிறார். அக்மார்க் முத்திரைகளைக் கொண்ட ஏனங்களில் உள்ள பொருட்கள் அரசாங்க உத்திரவாதத்தோடு குணமும், தரமும்கொண்டவைகள்தான் என உறுதியாகக் கொள்ளலாம். அக்மார்க் என்பப்படுவது "அக்ரிகெல்சுரல் மார்க்கெட்டிங்" (Agricultural Marketing) என்பதின் சுருக்கமே.

இதற்கான நடவடிக்கைகளை முப்பது ஆண்டுகளுக்கு முன்பே சென்னை அரசாங்கம் எடுத்துக் கொண்டு அக்மார்க் தரத்தினை நாடெங்கும் பரவச்செய்தது. அக்மார்க் அரிசி தரம் வெகு விரைவாக பரவி அக்மார்க் அரிசி உற்பத்தி பெருகியது. ஆனால் இரண்டாவது உலக யுத்தத்தினால் விளைந்த சீரில்லா நிலைமையால் அக்மார்க் அரிசி உற்பத்தி குறைந்து இப்பொழுது மெல்ல மெல்ல பெருகி வருகிறது.

நெய், நல்லெண்ணெய், அரிசி, கரும்பு, வெல்லம், உருளைக்கிழங்கு, முட்டை, சாத்துக்குடி, ஆரஞ்சு முதலியவைகள் நம் மாகாணத்தில் அக்மார்க் தரப்படி தரம் பிரிக்கப்படுகின்றன. வெண்ணெய், நெய், நல்லெண்ணெய், இவைகள் நன்கு, கைதேர்ந்த இரசாயனர்களால் இதற்காக நிறுவப்பட்டுள்ள இராசாயன கூடங்களில் பரிசோதனை செய்தபின்தான் தரம் பிரிக்கப்படுகின்றன. இத்தகைய இராசயன கூடங்களை பண வசதி கொண்டோர்களும் நிறுவி தரம் பிரித்துக் கொள்ளுகிறார்கள். அரசாங்கம் சிறு வியாபாரிகளுக்குச் சாதகமாக அரசாங்க கூடங்களையும் நிறுவியுள்ளது. தனிப்பட்டவர்களால் நடத்தும் இராசயனக் கூடங்களில் தரம் பிரிக்கப்படும் நெய், எண்ணெய் சரக்குகள் நம் மாகாணத்தின் மொத்தத் தேவையில் ஒரு சிறு அளவே ஆகும். கரூர், கோவை, ஈரோடு, சென்னை, மதுரை, விருதுநகர், சேலம் முதலிய இடங்களில் அரசாங்கம் நிறுவியுள்ள இரசாயனக் கூடங்களின் மூலம் சிறு வியாபாரிகள் தரம் பிரித்து மாகாணத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலும். வேலூரில் நிறுவியுள்ள இரசாயன கூடத்தின் மூலம் கரும்பு, வெல்லத்தின் தரம் பிரித்துக் கொள்ளலாம். பெரும் அளவில் நெய், வெண்ணெய் இவைகளைத் தரம் பிரித்து அக்மார்க் உத்திரவாதத்துடன் எங்கும் கிடைக்க இலவசமாக கட்டணம் எதுவுமின்றி அரசாங்கக் கூடங்களில் தரம் பிரித்து, வழங்கவும் அரசாங்கம் சலுகை அளித்துள்ளது. அரசாங்க ஸ்தாபனங்கள் எல்லாம் அக்மார்க் பொருள்களையே மார்க்கெட் விலைக்கு 5 சத விகிதம் விலை வித்தியாசம்வரை வாங்க வேண்டும் எனவும் விதித்துள்ளது.

எல்லா அக்மார்க் தாயாரிப்பாளர்களும் அக்மார்க் அவசியத்தையும், அதன் வளர்ச்சியையும் மக்களிடையே பெருக்கச் செய்ய அவர்களுக்கென "அக்மார்க் தயாரிப்பாளர்கள் சங்கம்" ஒன்றினை தோற்றுவித்துள்ளார்கள். கூடுமானவரை குறைந்த விலைக்கே அக்மார்க் பொருள்கள் கடை வீதிகளிலும் மற்றும் விற்பனை இடங்களிலும் கிடைக்க இச்சங்கம் பெரிதும் பாடுபடுகிறது. உபயோகிப்பவர்கள் சார்பில் பொது சேவைப்புரியும் மாதர்கள் எல்லோரும் ஒருங்கே கூடி **அக்மார்க் பொருள் உபயோகிப்பவர்கள் சங்கம்** ஒன்றினை உருவாக்கி அக்மார்க் பொருள் வாங்கும் ஒவ்வொருவருக்கும் இவைகள் எளிதிலும் மலிவுடனும் கிடைக்கவும் அதன் உபயோகத்தை அதிகரிப்பதிலும் இச்சங்கம் பெரிதும் உழைக்கிறது. வீடுதோறும் சென்று அக்மார்க் அவசியத்தை விளக்கி அக்மார்க் பொருள்களின் உபயோகத்தைப் பெருக்குகிறார்கள். சில முக்கிய இடங்களில் எல்லாம் அக்மார்க் பண்டகசாலைகளை நிறுவி இப்பொருள்கள் கிடைக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது. அக்மார்க் அவசியத்தின் நன்மையினை உணர்ந்தோர்கள் நாளா வட்டத்தில் எண்ணிக்கையில் பெருகிக் கொண்டே வருகிறார்கள். அக்மார்க் தயாரிப்பாளர்களும் பன்மடங்கு பெருகி 400-க்கு மேற்பட்டவர்களாகி உள்ளார்கள். பல லட்ச ரூபாய்கள் மதிப்புக்கொண்ட அக்மார்க் பொருள்கள் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் எல்லா குடிமக்களும் அக்மார்க் பொருள்களையே உபயோகிக்கும் அளவிற்கு அக்மார்க் பொருள்கள் தயாரிக்கப்படவில்லை. வேண்டிய அளவு தயாரிக்கப்பட்டால்தான் ஒரே தடவையாக கலப்படத்தையே ஒழித்துக் கட்டமுடியும். ஆனால் தென் இந்திய மக்கள் விரும்பும் நெய் குணத்தை அதிக நாள் கெடாமல் வைத்துக்கொள்ள வசதி குறைவுகள்தான் தடையாக உள்ளது. பண்டைய முறையில் வெண்ணெய் தயாரித்தல், விற்பனை கேந்திரங்களுக்கு அவற்றின் தேவைக்கேற்ப விரைவில் பொருள் அனுப்ப வாகன வசதி, உபயோகிப்பவர்கள் விரும்பி வாங்கும் அளவுகளில், சொற்ப விலை ஏனங்களில் தயாரித்தல் முதலிய அம்சங்களில் அதிக கவனம் செலுத்தி ஆவன செய்தால் நிச்சயம் **அக்மார்க் அவசியம்** பெருகி, எல்லோரும் அக்மார்க் பொருள்களையே விரும்பி வாங்குவார்கள்.

—(: :)—

முல்லைச் சாகுபடி குறிப்பு

[த. சொக்கலிங்கம், B.Sc. (Ag.). சிறப்பு விவசாய விளக்குனர், ஆம்பூர்,
S. கோவிந்தராஜு, செயல் விளக்க கண்காணிப்பாளர்.]

முல்லையின் சிறப்பு.—நம் நாட்டில் வருவாய்தரும் பல்வேறு பணப் பயிர்களில் மலர்ச்சாகுபடியும் ஒன்றாகும். அவற்றுள் முல்லை மற்றெல்லா மலர்களையும் காட்டிலும் சிறந்து விளங்குகின்றது. அதன் தேவையும் நாளுக்கு நாள் அதிகரிப்பதால் முடிந்த இடங்களில் இம்மலர் தோட்டங்கள் அமைத்து அதிக லாபம் அடையலாம்.

முல்லைச் சாகுபடி குறிப்பு.—முல்லைச் சாகுபடிக்கு, நல்ல வடிகால் வசதியுள்ள இரு மண்பாடான நிலமும், கோடையில் தகுந்த அளவிற்கு நீர்ப்பாசன வசதி செய்யக்கூடிய இடமாகவும் அமைய வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இத்தோட்டங்கள் எல்லாம் நகர்ப்புறங்களுக்கு அருகாமையிலும் அல்லது உடனுக்குடன் போக்குவரத்து வசதியுள்ள இடமாகவும் அமைய வேண்டும். ஏனெனில் முல்லை இருபத்தி நான்கு மணிக்குமேல் இருந்தால் வாடி விடுவதோடன்றி அதன் மணமும் மாறிவிடும். இவற்றை மலர்வதற்கு முன்பாக—அரும்பாக இருக்கும்போதே பறித்து உடனுக்குடன் அவை செல்ல வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

நடவு காலமும் முறையும்.—இரண்டு வருட பதியன் களை புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் நடவேண்டும். நடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே நிலத்தை உழுது நன்றாகப் புழுதியாக்கி, ஆறு அடி வரிசை அமைத்து, செடிக்கு செடி ஆறு அடி அமையுமாறு 2′×2′×1′ (நீளம், அகலம், ஆழம்) வீதம் குழி எடுக்க வேண்டும். பிறகு பதியன்களைக் கொண்டு வந்து குழிக்கு 10 ராத்தல் நன்றாக மக்கிய தொழு உரம் போட்டு நடவேண்டும். பின் போதிய அளவு தண்ணீர் பாய்ச்சி வரவேண்டும்.

உரமும் உரம் வைக்கும் காலமும்.—ஒவ்வொரு செடிக்கும் 25 ராத்தல் நன்றாக மக்கியதொழு உரமும், ஒரு ராத்தல் கடலை பிண்ணாக்கும் கலந்து வைக்கவேண்டும். இந்த உரத்தை தை மாதத்தில் நன்றாகக் கொத்திய பிறகு வைத்து மண் அணைக்க வேண்டும்.

நீர்ப்பாசனம்.—உரம் வைத்து மண் அணைத்த பிறகு 6 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும். தண்ணீர் கட்டி 40-வது நாளிலிருந்து அரும்புகள் வர ஆரம்பிக்கும். பொதுவாக செடி வைத்த ஆரம்பத்தில் நன்றாக வேர் விட்டு கிளைக்கும் வரை இடத்துக்குத் தக்கவாறு போதிய அளவு தண்ணீர் கட்டி வர வேண்டும். மற்ற காலங்களில் நீர்ப்பாசனம் அவசியமில்லை. ஆனால் தை மாதம் முதல் ஆடி மாதம் வரை தகுந்த அளவிற்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

களை எடுப்பு.—உரம் வைப்பதற்கு முன் ஒரு முறையும் பிறகு ஒரு மாதம் கழித்து மற்றொரு முறையும் களை எடுக்க வேண்டும்.

மகசூல்.—சித்திரை மாதம் முதல் ஆடி மாதம் வரை ஏக்கருக்கு 1 நாளில் 200 சேர் (8 பலம்—1 சேர்) அல்லது 56 கிலோகிராம் முல்லை கிடைக்கும். செடி வைத்த 3 வருடத்திலிருந்தே ஓரளவிற்கு பலன் கொடுக்குமென்றாலும் 5 வருடங்களுக்குப் பிறகே தொடர்ந்து 15 வருடம் வரை முழு பலன்தரும். சுமாராக ஒரு பருவத்தில் ஏக்கருக்கு 4,500 கிலோகிராம் முதல் 6,000 கிலோகிராம் வரை கிடைக்கும்.

ஐந்து வருடத்திலிருந்து சுமாரான (1 வருடத்திற்கு) வரவு செலவு திட்ட சாகுபடி குறிப்பு விவரம் :—

		ரூ.
1.	தொழு எரு 25 வண்டி. (வண்டி வாடகை உட்பட).	150·00
2.	கடலை பிண்ணாக்கு 2½ பாரம்.	200·00
3.	களை எடுப்பு (மண் வெட்டியால்).	60·00
4.	உரம் வைத்தலும் மண் அணைத்தலும்.	40·00
5.	நீர்ப்பாசனம்	150·00
6.	பயிர்ப் பாதுகாப்பு.	30·00
7.	பூ பறிக்கும் கூலி. (33 ந.பை. ஒரு கிலோகிராமுக்கு)	1,650·00
	ஆக மொத்த செலவு ரூ.	2 280·00

மகசூல் சுமார் 5,000 கிலோ கிராம்.		
ஒரு கிலோ கிராம் சராசரி விலை	..	1·78
முல்லையின் விலை	... ..	8,900.00
மொத்தச் செலவு	... ..	2,280·00
லாபம் ரூ.		6,620·00

ஆகவே தக்க பராமரிப்பு இருந்தால் எந்த விதத்திலும் ரூ. 6,000-க்கு குறையாமல் வருமானம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் இதைவிட அதிகப்படுத்தவும் செய்யலாம்.

ஊடு பயிர் செய்தல்.—செடி வைத்த முதல் 5 வருடங்கள் வரை வெண்டை, கத்தரி, தக்காளி போன்ற தோட்டக்கால் பயிர்களை ஊடு பயிராக சாகுபடி செய்வதன் மூலம் சாதாரணமாக சாகுபடி செய்வதன் பயனாகக் கிடைக்கும் வருமானத்திற்கும் குறைவில்லாமல் பெறலாம்.

பூச்சி மற்றும் நோய் தடுப்பு முறை.—அசுவுனி, இலைப்பேன், வண்டு ஆகியவற்றால் சேதமுண்டாகும். இவைகள் அநேகமாக தை மாதத்திற்குப் பிறகு செடிகள் துளிர்த்து வரும்போதே தாக்கும்.

அசுவுனி.—பாலிடால் ஒரு அவுன்சுக்கு 12½ காலன் தண்ணீர் கலந்தோ அல்லது எண்ட்ரக்ஸ் ஒரு அவுன்சுக்கு 6¼ காலன் தண்ணீர் கலந்தோ தெளிக்க வேண்டும்.

இலைப்பேன் :—B. H. C. 10% ஏக்கருக்கு செடிகளின் அளவைப் பொருத்து 20—30 ராத்தல் தூவ வேண்டும்.

வண்டு.—D.D.T. 50% ராத்தலுக்கு 25-30 காலன் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

செவ்வெட்டை நோய்.—இலைகள் சுருண்டு பழுத்து போகும். இதற்கு (Wettable Sulpher) தண்ணீரில் கரையும் கந்தகத் தூளை ஒரு ராத்தலுக்கு 30 காலன் தண்ணீர் கலந்து தெளிப்பதால் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். நோய் வருவதற்கு முன்னமேகூட தெளிக்கலாம்.

இத்தகைய முறைகளை செம்மையுற கையாளுவதன் பயனாக முல்லையின் நெடிய மணம்—இச்சாகுபடியைக் கைக் கொள்வோர் தம் வாழ்விலும் என்றும் மாறாத மணத்தைப் பெறுவர் என்பது திண்ணம்.

வேளாண்மையில் வேலி

[T. இரகோத்தம ராவ், B.SC. (Ag.), K. S. ரெங்கனாதன், B.SC. (Ag.),
விவசாய கல்லூரி, விரிவினைப் பிரிவு, கோவை.]

விவசாயப் பயிர்களின் வளர்ச்சியும் மகசூலும் பூச்சிகள், நோய், வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைக் காரணங்களால் பாதிக்கப்படுவது போல், ஆடு மாடுகள் மேய்ந்துவிடுவதாலும் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு ஏற்படும் சேதத்தைத் தடுக்கவே விவசாயிகள் தங்கள் பண்ணைகளைச் சுற்றி பல்வேறு வகைகளில் வேலியிட்டுக் காக்கிறார்கள். வயல்களைச் சுற்றி வேலியிடுவதன் அவசியத்தை உணர்த்தவே பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரும்,

“ கூலியிடா வேலைக்கு ஒக்கும்
வேலியிடா வேளாண்மை தான் ”

என்று கூறியுள்ளார்.

சாதாரணமாக வேலி என்றவுடன் வெறும் கம்பிகளாலோ அல்லது முகம்பிகளாலோ கட்டப்பட்ட வேலியையே நாம் நினைக்கிறோம். சில விவசாயிகள் கற்களைக் கொண்டு பண்ணையைச் சுற்றிலும் சுவர் அமைக்கிறார்கள். மேலை நாடுகளில் சக்தி குறைந்த மின்சாரம் பாயும் கம்பிகளைக் கொண்டே வேலி எழுப்புகிறார்கள். ஆனால் ஒரு பண்ணையின் நிர்வாகத்தை பொருளாதார நோக்குடன் பார்க்கும் போது பண்ணையைச் சுற்றிலும் நன்கு அடர்ந்து வளரும் செடிகளையே வேலியாக அமைப்பது தான் சிக்கனமானதும் சுலபமானதும் ஆகும். இப்படிப்பட்ட வேலியைத்தான் “ உயிர்வேலி ” என்கிறோம். ஆனால் மற்றவகை வேலிகளைப் போலன்றி உயிர் வேலிக்காக எழுப்பப்படும் செடியானது நன்கு அடர்த்தியாக வளர்ந்து நேர்த்தியான வேலியாக விளங்குவதற்கு சில ஆண்டுகள் பிடிக்கும். அதுவரை பொறுமையோடிருந்து அச்செடிகளைப் பாதுகாத்து வந்தால் நான்கைந்து ஆண்டுகளில் நிரந்தரமானதும் உறுதியானதும் அடர்த்தியானதுமான வேலியைப் பண்ணையைச் சுற்றிலும் உண்டாக்கலாம்.

உயிர்வேலிக்காக உபயோகிக்கும் செடிகளுக்குப் பின் வரும் இயல்புகள் அத்தியாவசியம். அவையாவன :—

1. எந்த இடத்தில் தேவையோ அந்த இடத்தில் உள்ள மண்ணில் நன்கு செழித்து வளரும் தன்மை.
2. வெட்ட வெட்ட தழைக்கும் தன்மை.
3. ஆடு மாடுகளால் விரும்பப்படாமலிருக்கும் இயல்பு.
4. வறட்சியைத் தாங்கும் தன்மை.
5. நன்கு அடர்ந்து வளரும் குணம்.

மேற்கண்ட இயல்புகளைக் கொண்ட எந்தச் செடியையும் இடத்திற்கேற்ப வேலிக்காக வளர்க்கலாம்.

உயிர் வேலி அமைப்பதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது வேலியின் அடிப்பாகம் நிறைந்த கிளைகளுடன் நன்கு அடர்ந்து வளர்வதற்கு ஏதுவாக செடிகள் வளர ஆரம்பித்து கிளைகள் விடும் தருவாயிலேயே தேவைக்குத் தக்கபடி கிளைகளை வெட்டிவிட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் செடிகள் உயரமாக அடிப்பாகத்தில் அடர்த்தியின்றி வளர்ந்து வேலியில் ஆங்காங்கே இடைவெளிகள் தென்படும். வேலியின் அடிப்பாகம் அடர்த்தியாக இருந்தால்தான் சிறிய பிராணிகளும் வேலியின் உட்புகமுடியாமலிருக்கும். நன்கு வெட்டிவிடப்பட்ட வேலியானது மேல்பாகத்தில் குறுகியும் அடிப்பாகத்தில் அடர்ந்து அகலமாயும் இருக்கும். உயிர்வேலிகள் ஆடு, மாடுகள் மேய்ந்து பயிர்கள் நாசமாவதைத் தடுப்பதற்கு உதவியாய் இருப்பதோடு காற்று அதிகயாக உள்ள இடங்களிலும், கடற்கரைப் பிரதேசங்களிலும் சீமைக்கருவேல், பூவரசு, யூகலிப்ட்ஸ் போன்ற உயரமாக வளரக்கூடிய மரங்கள் காற்றின் வேகத்தினால் பயிர்களும் மரங்களும் பாதிக்கப்படாமலிருக்க காற்றுத்தடுப்புக்காக வேலிகளாக உபயோகிக்கப்படுகின்றன.

உயிர்வேலிக்காக உபயோகிக்கக்கூடிய செடிகளில் முக்கியமானவை, சீமைக்கருவேல், கிளைரிசிடியா, கற்றாழை, முள்ளுக்கிளுவை, கள்ளி வகைகள், செம்பருத்தி, புளிய மரம், மாதுளை முதலியன.

இவற்றுள் எல்லா இடங்களிலும் வளரக்கூடிய தன்மையையுடைய சீமைக்கருவேலைப் பற்றிய சில விவரங்களை இங்கு கவனிப்போம்.

தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டைச் சேர்ந்த இது ஆழம் இல்லாத மண் நிலங்களில் செழித்து வளரும் வறட்சியைத் தாங்கக்கூடிய ஒரு முள் மரம். இதன் இலைகளை ஆடு, மாடுகள் விரும்பித் தின்பதில்லை. இந்த மரம் விறகிற்கு ஏற்றது. காய்களை மாட்டுத் தீவனமாக உபயோகிக்கலாம்.

இதை வேலி அல்லது காற்றுத் தடைக்காக வளர்க்க தேவையான இடத்தைச் சுற்றி 1½–2 அடி அகலத்தில் ஒரு அடி ஆழமுள்ள சால்கள் வெட்டி மழைக்குப்பின் விதைகளை ஒரு அங்குல இடைவெளி விட்டு ஊன்றவேண்டும். மூன்றுவாரம் சென்றபின் இடைவெளியை 2 அல்லது 3 அங்குலத்திற்கு அதிகப்படுத்தி மற்ற செடிகளைப் பிடுங்கிவிட வேண்டும். செடி சிறியதாய் இருக்கும் போது ஆடு, மாடுகள் அவற்றைத் தின்று அழிக்காமலிருக்க அவற்றை வேலம் முள்ளோ அல்லது ஈச்சமுள்ளோ கொண்டு பாதுகாக்க வேண்டும். ஒருமாத காலமானபின்பு செடிக்குச்செடி 6–8 அங்குல இடைவெளிவிட்டு மற்ற செடிகளை எடுத்துவிட வேண்டும். பிறகு செடிகளின் நுனிகளை வெட்டிவிடுவதோடு கீழே பக்க வாட்டில்தோன்றும் புதிய அடர்த்தியான

தென்னகம் எங்கும் பெரும்பாலான விவசாயிகள் பல்லாண்டுகளாக
ஒருமுகமாகப் பாராட்டி

"சூரியன்" மார்க் கலப்பு உரங்களை

வாங்குவதின் காரணம்:

COIMBATORE CHEMICALS & FERTILISERS LTD. SUN BRAND (PODANUR)

Regd. No.
156902

* சர்க்காரின் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.
* பயிர் உணவுகளின் சத விகித சத்துப் பொருள்கள் உத்திரவாத மளிக்கப்பட்டிருக்கிறது.
* நிலங்களின் செழுமையை நீடித்துப் பாதுகாத்து அமோக விளைச்சலைத் தருவதில் முன்னணியில் நிற்கின்றது.

சீல்களுடன் கூடிய "சூரியன்" மார்க் கலப்பு உரங்களை கவனித்து, இந்த உரமிடுங்காலத்திலும் சகல பயிர்களுக்கும் உபயோகித்து, மகசூலைப் பெருக்குங்கள். தங்களூர் அருகிலுள்ள எமது அத்தாட்சி பெற்ற விற்பனையாளர்களிடம் கண்ட்ரோல் விலைக்கே வாங்கிப் பயனடையுங்கள்.

விவரங்களுக்கு :—

கோயமுத்தூர் கெமிகல்ஸ் & பெர்டிலைசர்ஸ் லிட்.,
457, வைசியாள் வீதி * கோயமுத்தூர்-1.

கேரளா கிளை :—54, புதுப்பரியாரம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் P. O., பாலக்காடு-2.

கிளைகளைப் பக்கத்திலுள்ள கிளைகளுடன் சேர்த்துப் பின்னி விடவேண்டும். ஒரு வருடத்திற்குப்பின், மறுபடியும் வளரும் நுனியை வெட்டி வேலிக்குப் பக்கவாட்டில் கிளைகளை மூங்கில் கழிகளினால் சேர்த்து முன்பு பின்னிய கிளைகளுடன் சேர்த்துக் கட்டவேண்டும். இவ்வாறு இச்செடி அடர்த்தியான நுழையமுடியாத பசும் வேலியாகிறது. வேலியின் கீழ்பாகத்தில் இடைவெளி ஏற்பட்டால் மறுபடியும் விதைத்து செடிகளை வளர்த்து அவைகளின் நுனிகளைக் கத்தரித்துவிட்டு அடர்த்தியாக வளரும்படி செய்யவேண்டும்.

காற்றுத் தடுப்புக்காக வளர்க்க இச்செடியை மூன்று முதல் நான்கு அடி இடைவெளிவிட்டு வளர்த்து நுனிகளைத் துண்டிக்காமல் 20 அடி உயரத்திற்கு வளரும்படி செய்ய வேண்டும்.

இச்செடியின் காய்கள் கெட்டியான தோலையுடையவை யாதலால் காயிலிருந்து விதையை பிரித்தெடுப்பது சற்று கடினமாக இருக்கும். அதற்காக நன்கு பழுத்த காய்களைச் சிறு துண்டுகளாக்கி இரவு முழுவதும் நீரில் ஊறவைக்க வேண்டும். மறுநாள் அவைகளை எடுத்து வெயிலில் காய வைத்து நன்கு உலர்த்தி சிறு கற்களுடன் சேர்த்து உலக்கையில் குத்தினால் விதைகள் காயிலிருந்து தனியாகப் பிரியும். 100 ராத்தல் எடையுள்ள காய்களிலிருந்து பத்து ராத்தல் விதைகள் கிடைக்கின்றன. ஒரு ராத்தல் விதையைக் கொண்டு ஒரு பர்லாங் நீளத்திற்கு வேலி அமைக்கலாம். ஒரு ஏக்கர் நிலத்தைச் சுற்றிலும் உயிர்வேலி அமைக்க சுமார் மூன்று ராத்தல் விதை தேவைப்படும். ஒரு ராத்தல் விதையின் விலை ஒரு ரூபாய்.

ஆகவே, விவசாயிகள் சீமைக்கருவேல் போன்ற செடிகளை உயிர்வேலியாக அமைப்பதன்மூலம் குறைந்த முதலீட்டில் சிறந்த வேலியிட்டு நிறைந்த பலனைப் பெறுவார்களாக !

அன்றும் இன்றும்

(கே. அமிர்தம், கூட்டுறவு சாகுபடியாளர் சங்கம், அரியலூர்.)

எங்கள் ஊர் முத்துப்பேட்டை வட்டாரத்தில் உள்ளது. இதன் தூரம்வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து சுமார் 12 மைல் ஆகும். இங்கு ஹரிஜன குடும்பம் சுமார் 50-க்கு மேல் இருக்கிறது. எங்களுக்கு சாகுபடி செய்ய அதிக நிலம் இல்லாததால் கூலி வேலை செய்து பிழைத்து வந்தோம். இந்த ஊரில் தஞ்சை கோடீஸ்வரர் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான நஞ்சை நிலம் 71·19 எக்கர் இருக்கிறது. மேற்கூறிய நிலத்தை இரண்டு வருடங்களுக்கு முன்பு தனி நபர் சாகுபடி செய்து வந்தார்கள். 1960–61-ம் ஆண்டிற்குப் பிறகு பலருடைய பெரு முயற்சியினல் மேலே சொன்ன 71·19 எக்கரையும் குத்தகைக்குப் பேசி சாகுபடி செய்யத் தீர்மானித்தோம். தனித் தனியாகப் பிரித்து சாகுபடி செய்தால் மிகவும் கஷ்டம் என்ற காரணத்தாலும் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால் அரசாங்கம் கடன் கொடுத்து உதவும் என்ற காரணத்தாலும் முதல் வருடத்திலேயே ஒரு கூட்டுறவு சாகுபடியாளர் சங்கம் அமைத்தோம். இதில் உள்ள மொத்த மெம்பர்கள் 36 பேர். இந்த 36 பேரில் ஒருவர் தலைவர், ஆறுபேர் டைரக்டர்கள். ஒரு சீனியர் இன்ஸ்பெக்டரும், ஒரு பீல்டுமேனும் கூட்டுறவுத் துறையினல் அமர்த்தப்பட்டிருக்கிறர்கள்.

எங்களில் ஒவ்வொருவருக்கும் 0·50 செண்டு முதல் 2·50 எக்கர் வரை பிரித்துக் கொடுக்கப்பட்டது. எங்கள் கையில் சாகுபடி செய்ய செலவுக்குப் பணம் இல்லாததால், உரம் எதும் போட முடியவில்லை. சாம்பல் மட்டும் சுமார் 10 வண்டி வரை ஒரு சிலர் போட்டார்கள். முழு நிலத்திலும் கட்டை சம்பா (எ.டி.டீ. 8.) நட்டோம். பயிர் நன்ருக வளரவில்லை. நோயினல் தாக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருந்தது. நோய்க்கு மருந்தடிக்க எங்கள் கையில் பணம் கிடையாது. மேலும் அதை உபயோகிக்கும் முறையும் தெரியாது. கடைசியில் நாங்கள் அறுவடை செய்து 450 கலம் தான். ஆனல் குத்தகைக்கு அளக்க வேண்டியதோ 500 கலம்! எங்கள் கையிலிருந்து 50 கலம் போட்டு குத்தகை நெல் அளந்தோம். ஆகவே 1960-61-ல் நாங்கள் செய்த சாகுபடி விழலுக்கு நீர் இறைத்தாற்போலாகிவிட்டது.

1961–62-ல் நாங்கள் மறுபடியும் சாகுபடி செய்வதா வேண்டாமா என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் இன்னும் ஒரு வருடம் சாகுபடி செய்து பார்க்கலாம் என்று கருதி மறுபடியும் அதே நிலத்தைக் குத்தகைக்குப் பேசி முடித்தோம். மறுபடியும் இம் முடிவுக்கு வந்ததன் முக்கிய காரணம் **தீவிர சாகுபடித் திட்டம்தான்!** 1961–62-ல் எங்கள் ஊரும் தீவிர சாகுபடித் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. தீவிர சாகுபடித் திட்டம் என்ருல் பணம் மாத்திரம் கடன் கொடுப்பது என்று நினைத்திருந்தோம்.

பிறகு விவசாய விஸ்தரிப்பு அலுவலர் மூலமாகவும், கிராம சேவகர் மூலமாகவும் தீவிர சாகுபடித் திட்டத்தில் கொடுக்கப்படும் கடனில் ஒரு பகுதி பணமாகவும், மீதியை



தீவிர சாகுபடித் திட்டம் அளிக்கும் நிதி, கருவி, உயர் ரக வித்து, ரசாயன உரம், பூச்சி மருந்து.

ரசாயன உரம், பூச்சி மருந்து, விதை, கருவிகள் முதலியனவாகவும் கொடுப்பார்கள் என்று அறிந்தோம். கிராம சேவகர் அவர்கள் எல்லோருக்கும் பண்ணைத் திட்டம் தயார் செய்தார்கள்.

1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், சேர்மன், துணை ரெஜிஸ்ட்ரார், வட்டார வளர்ச்சி அதிகாரி, கிராம சேவகர் முதலியோர் வந்திருந்து எங்களுக்குக் கடன் தொகை கொடுத்தார்கள். அரியலூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தினின்றும் எங்களுக்குத் தேவையான அம்மோனியம் சல்பேட், யூரியா, சூப்பர் பாஸ்பேட் முதலியன வழங்கப்பட்டன. ஒரு வாரத்திற்குப்பின் விவசாய விஸ்தரிப்பு அலுவலர் எங்களுக்கு ஏ.டி.டீ. 8 விதை நெல் 12 மூட்டையும், பூச்சி மருந்தையும் ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுத்தார். அதுமட்டுமல்லாமல் ரசாயன உரங்கள் எப்பொழுது உபயோகிக்க வேண்டும் என்பது பற்றியும், ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்யும் முறை பற்றியும், எங்களுக்குப் புரியும்படி தெளிவாக எடுத்துக் கூறினர். கிராம சேவகரும் எங்கள் ஊரிலேயே இருப்பதால் நவீன முறை சாகுபடியைப்பற்றி அவ்வப்பொழுது கேட்டுத் தெரிந்துகொள்ள முடிந்தது.

எங்களில் சிலர், பூச்சி மருந்தை அடித்தால் அடிப்பவருக்கு உயிருக்கே ஆபத்து என்று எண்ணியும் அதை அடிப்பதினால் ஒரு பயனும் இல்லை என்றும் கூறி வாங்க மறுத்தனர். விவசாய விஸ்தரிப்பு அலுவலரும், கிராம சேவகரும், எங்களில் தெரிந்தவர்களில் சிலரும், பூச்சி மருந்து அடிப்பதினால் பயிருக்கு ஏற்படும் நன்மையை எடுத்துக் கூறி, அவர்களே பக்கத்திலிருந்து எப்படி மருந்தடிப்பது என்பதைக் காண்பிப்பதாகவும் கூறிய பின்னர் மருந்தை வாங்கிக்கொண்டனர்.

நட்ட இரண்டு மாதங்களுக்குப்பின் பயிரில் பூச்சி அடித்து ஒரு சில பகுதிகள் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. விவசாய விஸ்தரிப்பு அலுவலரும், கிராம சேவகரும் பக்கத்திலிருந்து மருந்தடித்துக் காண்பித்தனர். பிறகு பயிர் நன்றாக இருந்தது. மேலும் பயிர் நன்றாக வளர என்ன செய்யவேண்டும் என்பதை விவசாய அலுவலர், கிராம சேவகரின் மூலம் அறிந்துகொண்டோம். “எரு செய்வதை இனத்தார் செய்யார்” என்ற முதுமொழிக்கேற்ப நெல் நன்றாக விளைந்தது. மாவுக்கு இரண்டு கலம் விளைந்த பூமியிலிருந்து உரத்தினாலும், நவீன சாகுபடி முறையினாலும், பயிர் பாதுகாப்பினாலும், மாவுக்குப் பத்து கலம் அறுவடை செய்ய முடிந்தது. உண்மையில் நாங்கள் இந்த 2,130 கலம் நெல்லைக் கண்டவுடன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் எப்பொழுதும் இருக்கவேண்டும் என்று வேண்டாத கடவுளில்லை. எங்கள் மகிழ்ச்சியைக் கண்ட விவசாய அலுவலரும், கிராம சேவகரும் மாவுக்குப் 10 கலம் விளைந்தது ஒரு பெரிய விளைச்சல் இல்லை என்றும், இதுபோல் இரண்டு பங்கு அடுத்த வருடம் விளைவிக்க வேண்டும் என்றும் கூறினர்.

நாங்கள் வாங்கிய மொத்தக் கடன் ரூ. 7,945 பணமாக ரூ. 2,600-ம், மீதியை சூப்பர் பாஸ்பேட், அம்மோனியம் சல்பேட், யூரியா, விதை, மருந்து கருவி முதலியன வாங்கவும் பெற்றுக்கொண்டோம். மாவுக்கு சராசரி 5 மரக்கால் சூபரும், 2 மரக்கால் அம்மோனியம் சல்பேட்டும் போட்டோம். வருகிற வருடத்தில் இன்னும் அதிகமாகப் போட உத்தேசித்திருக்கிறோம்.

குத்தகை 500 கலமும், கடனுக்காக 752 கலமும், பொதுப் பணத்திற்காக 70 கலமும் எடுத்துக்கொண்டபின் எங்களுக்கு மீதியிருந்தது 808 கலம். இதை அவரவர்களுக்குப் பிரித்துக் கொடுத்திருந்த நிலப்பரப்பிற்குத் தகுந்தாற்போல் பகிர்ந்துகொண்டோம்.

ஐம்பது கலம் கையிலிருந்து போட்டு குத்தகைக்கு அளந்த எங்களுக்கு, ஒரு வருடத்தில் 808 கலம் நிகர வருமானம் கிடைத்ததென்றால் அதற்குக் காரணம் தீவிர சாகுபடித் திட்டம்தான்.

1961-62-ல் எங்களுக்குப் பண்ணைத் திட்டம் தயார் செய்து விட்டார்கள். மேலே சொன்னதுபோல் வருகிற வருடம் ரசாயன உரம் அதிகம் போட இருக்கிறோம். நாற்றிலும், பயிரிலும் பூச்சி விழுந்தாலும், இல்லாவிட்டாலும் முன்னதாகவே மருந்தடிக்க இருக்கிறோம். இந்த வருடம்போல் எப்பொழுதும் இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் இருந்தால் எங்களைப்போல் உள்ள ஏழை விவசாயிகளின் தரம் உயரும், நாட்டின் உணவுப் பற்றாக்குறை நீங்கும் என்பதில் சந்தேகமில்லை. வாழ்க, தீவிர சாகுபடித் திட்டம்! வளர்க, விவசாயத் துறை !!

உயர்தர பலவிதச் சிறந்த ஜாதி

காய்கறி விதைகள்

இதர புஷ்பத் தோட்ட விதைகள்
திடமான நம்பிக்கை வாய்ந்த உண்மை ஜாதி

ஒட்டு மாஞ்செடிகள்

எலுமிச்சை, சாத்துக்குடி முதலிய

பலவிதப் பழச் செடிகள்

அலங்கார, வாசனை புஷ்பச் செடிகள்
பூச்சிநோய் மருந்துகள்
கலப்பு உரங்கள்
தோட்ட மருந்துகள்

கிடைக்குமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

2, டாக்டர் சிங்காரவேலு தெரு
தியாகராயநகர்　　சென்னை-17

தந்தி : RAJSEED.　—　போன் : 87262.

புரட்டாசி-ஐப்பசி மாத விவசாயக் குறிப்புகள்

(விரிவிணைப் பிரிவு)

பொங்கல் (9030ஜி), பாண்டியன் (கே. 6) போன்ற புது மானாவாரி பருத்தி ரகங்களை உங்கள் பண்ணைப் பயிர்த் திட்டத்தில் சேர்த்துப் பயனடையுங்கள்.

தென்னை விளைச்சலை அதிகரியுங்கள்! ஆண்டுக்கு 30-லிருந்து 50 காய்கள் கிடைக்கும் மரத்தினின்று 100 காய்கள் அடையுங்கள்.

* ஆண்டுக்குக் குறைந்தது இரு முறையாவது இடைச் சாகுபடி செய்யவேண்டும். மரத்திற்கு மரம் 25′—30′ வரை இடைவெளியிருப்பதால் இந்த இடத்தை மண் வெட்டியால் கொத்தவேண்டும்; பெரிய தோப்புகளில் மூன்று முறை உழலாம். இடை உழவால் மட்டும் 12 முதல் 15 காய்கள் கூடுதலாகக் கிடைப்பதாக பரிசோதனை மூலம் தெரியவருகிறது.

* மரங்களுக்கிடையே உள்ள இடத்தில் சணல், கொளிஞ்சி, கலப்பகோனியம் (calopogonium) இவைகளில் ஒன்றை வளர்த்து இடைச்சாகுபடி செய்யும்பொழுது அவற்றை நிலத்திலிட்டு உழுதுவிடவும்.

* மரம் ஒன்றுக்கு, 2 அல்லது 3 கூடை தொழுஉரம் அல்லது பசுந்தழைகளுடன், 2 கிலோ கிராம் நெ. 3 உரக்கலவை (6 : 6 :12) இடவேண்டும்.

* தென்னைக் கருவண்டை அறவே ஒழியுங்கள். இவ் வண்டின் புழுக்கள் உரக்குவியல்களிலும், அழுகிய தாவரப் பொருள்களிலும் வளர்கின்றன. குப்பை உரத்தை வண்டியில் எற்ற கிளரும்பொழுது இவ்வண்டின் கொழுத்த வெள்ளைப் புழுக்களைக் கண்டால் அழிக்க வேண்டும். இவை 4 முதல் 6 மாதங்கள் வரை வளர்கின்றன. இவற்றினின்றும் வெளிவரும் வண்டுகள் நீண்ட நாட்கள் இருப்பதால் தென்னை மரத்திற்குப் பெருஞ்சேதம் ஏற்படுகிறது.

குருத்து பாகத்தை குறைந்தது 3 மாதங்களுக்கொரு முறையாவது சோதிக்கவேண்டும். வண்டுகள் தென்பட்டால் அவற்றை நீண்ட கூர்மையான கம்பிகொண்டு குத்திக்கொன்று விடவேண்டும். இலைச் சந்துகளையும், வண்டு செய்த துளைகளையும் மணலோடு 5 சதவிகிதம் குளோர்டேன் மருந்தைக் கலந்து நிரப்பவேண்டும்.

நெல்

(நெல் ஆராய்ச்சி நிபுணர், கோவை.)

செங்கற்பட்டு மாவட்டம்

சம்பாவில் ஊடுழவு செய்தல். பின்போக சம்பாவிற்கு (நட்டு 1 மாதத்திற்குப் பின்) 2-வது முறை இரசாயன (தழைச்சத்து) உரமிடுதல்.

வட ஆற்காடு

சம்பாவில் ஊடுழவு செய்தல். முன்போக சம்பா அறுவடை. பிந்திய பயிர் நடவு முடிந்து 2-வது முறை இரசாயன உரமிடுதல். தாளடி நாற்றங்கால் தயாரிப்பு.

தென் ஆற்காடு

தொடர்ந்து குறுவை அறுவடை. தாளடி நடவு, களையெடுப்பு, 2-வது முறை இரசாயன உரமிடுதல்.

தஞ்சாவூர்

தாளடி நடவு. முதல் முறை இரசாயன உரமிடுதல்; 15 நாட்களுக்கொரு முறை ஊடுழவுக் கருவியோட்டிகளையெடுத்தல்.

திருச்சி

தொடர்ந்து குறுவை அறுவடை. சம்பாவில் ஜப்பானிய ஊடுழவுக் கருவியோட்டி, 2-வது முறை இரசாயன உரமிடுதல். பின்போக சம்பா நடவு. செஸ்பேனியா நாற்றுகளை வரப்போரம் நடுதல்.

கோயம்புத்தூர்

விதைப்பு முடிவு. (ஏ. எஸ். டி. 5., 11, கோ. 2 முதலிய பொறுக்கு விதைகள் பிந்திய நடவுக்கு ஏற்றவை.) நடவு வயல் தயாரிப்பு; தொடர்ந்து நடவு; 2-வது முறை இரசாயன உரமிடுதல்; ஊடுழவுக் கருவியோட்டுதல்; கலப்புக் கதிர் களைதல். குறுகிய கால ரக நெல் அறுவடைத் துவக்கம்.

சேலம்

தொடர்ந்து கார் அறுவடை. பின்போக சம்பா நட்டு முதல் முறை இரசாயன உரமிடுதல். முன்போக சம்பாவில் களையெடுப்பு.

மதுரை

சம்பாவில் களையெடுப்பு. பிசான நடவு, முதல் முறை இரசாயன உரமிடுதல் ஜப்பானிய ஊடுழவுக் கருவியோட்டி 15 நாட்களுக்கொரு முறை களையெடுத்தல். விதைக்கென செஸ்பேனியா நாற்றுகளை வரப்போரம் பரவுதல்.

இராமநாதபுரம்

நட்டு ஒரு மாதத்திற்குப் பின் 2-வது முறை இரசாயன உரமிடுதல்; 25 நாட்களுக்கொரு முறை ஊடுழவு செய்தல்.

திருநெல்வேலி

பிசான நடவு, முதல் முறை இரசாயன உரமிடுதல்; 15 நாட்களுக்கொரு முறை களையெடுத்தல். விதைக்காக, செஸ்பேனியா நாற்றுகளை வரப்போரம் நடுதல்.

சிறுதானியப் பயறு வகைகள்

(சிறுதானிய ஆராய்ச்சி நிபுணர், கோவை.)

சென்னை பிரிவு

புஞ்சையில் சாமை, கொள்ளு, உளுந்து விதைப்பு. (கோ. 1 சாமை, கோ. 1 கொள்ளு. நெ. 212 உளுந்து போன்ற பொறுக்கு வித்துக்களை விதையுங்கள்).

இறைவைக் கம்பு சாகுபடி (எக்ஸ். 3, கோ. 5 உயர்ந்த ரகங்கள்).

கோயம்புத்தூர் பிரிவு

இறைவை கேழ்வரகு அறுவடை.

தஞ்சை பிரிவு

புஞ்சை வரகு, தினை, சாமை முதலியவற்றிற்கு ஊடுழவு கொடுத்தல்.

மதுரை பிரிவு

புஞ்சை விதைப்பு முடிவு. கே. 3 சோளம், கோ. 1 பச்சைப்பயறு போன்ற பொறுக்கு விதைகளை உபயோகியுங்கள்.

எண்ணெய் வித்துக்கள்

(எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிபுணர், கோவை.)

நிலக்கடலை

தென் ஆற்காடு, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள்

மானாவாரி.—பிந்தி விதைத்தப்பயிரில் 'தந்தி' கருவிகள் ஓட்டி 2-வது முறை மண் கிளறி களையெடுத்தல்.

கோயம்புத்தூர், சேலம், திருச்சி, நீலகிரி மாவட்டங்கள்

மானாவாரி.—அறுவடை செய்த கடலையை உலர்த்தி சாக்குகளில் எடுத்து வைத்தல்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள்

மானாவாரி.—இருபோக (முன் பின்) பயிருக்கும் 'தந்தி' கருவிகள் ஓட்டி முறையே, 2-ம் முறை முதல் முறை மண் கிளறி களையெடுத்தல்.

தென்னை

பசுந்தாள் உரத்துடன் இரசாயன உரமிட்டு உழுதல்.

உர அளவு	எக்கருக்கு
அமோனியம் சல்பேட்	225 ராத்தல்
சூப்பர் பாஸ்பேட்டு அல்லது எலும்புத்தூள்.	150 ,,

பசுந்தாள் உரப்பயிருக்கு தொழு உரமோ, கம்போஸ்ட் உரமோ இடாதிருந்தால் இப்பொழுது இடலாம்.

உரம் இடுவதற்கு போதிய ஈரப்பதம் இருக்குமாறு கவனிக்கவேண்டும்.

சாம்பல் இடாதிருந்தால் இட்டு இடை உழவுக் கருவியோட்டி மண்ணுடன் கலக்கவும். தேங்காய் மட்டை அதிக அளவில் கிடைக்குமானால், தென்னை வரிசைகளுக்கிடையே 6′ அகலம் 1½′ ஆழம் உள்ள கால்வாய்கள் வெட்டி அவற்றில் மட்டைகளைப்போட்டு புதைக்கலாம். மட்டைகளின் குழிவான பக்கம் மேல் நோக்கியிருக்குமாறு வைக்கவும். மாதத்திற்கு 500-லிருந்து 1,000 மட்டைகள் வைக்கலாம். இவ்வாறு செய்வதால் மண்ணின் நீர் பிடிப்புத் தன்மையும், வளமும் அதிகரிக்கின்றன.

பருத்தி

(பருத்தி ஆராய்ச்சி நிபுணர், கோவை.)

கோயம்புத்தூர், சேலம், திருச்சி, மதுரையில் சில பகுதிகள்

கம்போடியாப் பருத்தி பயிரிடும் இடங்களுக்கு

மானாவாரி.—விதைப்பு முடிவு (10—20 ரா./எக்கர்) களையெடுப்பு.

இறைவை.—குழிக்கு இரண்டு செடிகள் விட்டு நெருக்கமாக உள்ள செடிகளை களைதல், விதைத்து 30 நாட்களுக்குப் பின் எக்கருக்கு 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட் உரமிடுதல், கொத்திக் கொடுத்தல், தத்துப்பூச்சி யொழிக்க முதல் முறையாக 'என்ட்ரின்' மருந்து தெளித்தல் (ஒரு அவுன்சுக்கு 6¼ காலன் தண்ணீர் கலக்கவும்), களையெடுத்தல்.

கருங்கண்ணி பயிர் செய்யும் இடங்களுக்கு

போதிய மழையிருப்பின் ஐப்பசி மாதம் சுமார் 2 வாரங்களுக்குள் விதைப்பு முடிவடையும். எக்கருக்கு 10—12 ராத்தல் விதையை அக்ரசான் (1 அவுன்சுக்கு 15 ராத்தல் விதை) மருந்து கலந்து விதைக் கலப்பையால் விதைக்கவும். குண்ட காவால் ஒட்டி விதையை மூடவும். கலப்பை ஓட்டி விதைச்சாலிலும் விதைக்கலாம். விதைக்கு விதை 4–6 அங்குலமும், வரிசைக்கு வரிசை 1½ அடி இடை வெளியும் விடவும்.

பழம் காய்கறி வகைகள்

(தோட்டக்கலை நிபுணர், கோவை.)

மார்கழியில் நடவேண்டிய திராட்சைக்கு பந்தக்காலுக்கு ஏற்ற மாங்கிளுவை நடுதல். வாழைத் தோட்டங்களில் பக்க கன்றுகளை எடுத்தல். ஆடியில் நட்ட வாழைக்கு உரமிடுதல். வடிகால் வசதியை கவனிக்க வேண்டும்.

திராட்சை, கொய்யா, சப்போட்டா அறுவடை.

கோஸ், காரட் விதைத்தல்.

வெண்டை, தக்காளி, கத்தரி, மிளகாய் அறுவடை.

வெங்காயம் விதைத்தல். ஆனியில் நட்ட வெங்காயம் அறுவடை.

கேள்வி அரங்கம்

(விரிவிணைப் பகுதி, கோவை-3)

கேள்வி.—கண்ணம்பாளையம் கிராமத்தில் சில தோட்டங்களில் ஒரு புதுவகையான களை காணப்படுகிறது. இதனுடைய பெயர் தெரியவில்லை; இதன் வேர்கள் எட்டடிக்கும் ஆழமாகப் பாய்ந்து செல்லுகின்றன. இந்தக் களையை ஒழிப்பதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன, ஒன்றும் பயன்படவில்லை. மூன்றடி ஆழத்திற்கு கடப்பாறையைக் கொண்டு இந்தக் களையைத் தோண்டியெடுத்து விட்டால், ஒரு பயிர் சாகுபடியாகும் வரை இது குறைந்து காணப்படுகிறது. ஆனால் இம்மாதிரியாகத் தோண்டியெடுப்பதற்கு (ஏக்கருக்கு 750 ரூபாய்) அதிக செலவாகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்தக் களை வளர்ந்து கொண்டே போகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

—சூலூர்

பதில்.—மேலே சொன்ன களை ஆராய்ந்து பார்க்கப் பட்டது. இது வெளி நாட்டிலிருந்து வந்து பரவிய களையாகும். இதன் ஆங்கிலப் பெயர் "சொலனம் எலிக்னிஃபோலியம்" (Solanum elaeugnifolium) என்பது இது விரைவாக வளர்ந்து அதிக ஆழத்தில் வேர்களைச் செலுத்த வல்லது. இதனைச் சாதாரணமாகக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம்.

இரசாயன மருந்துகளை உபயோகித்து இக்களைகளை ஒழிக்கலாம். 2,—4. டி. என்ற இரசாயனக் களைக் கொல்லியில் பத்து ராத்தலை எடுத்து 100 காலன் தண்ணீரில் கரைத்து ஒரு ஏக்கர் நிலத்தில் தெளித்து இதனைக் கட்டுப் படுத்தலாம். மீண்டும் களை முளைத்தால் மூன்று மாதங்களுக்குப் பிறகு இன்னொரு முறை மருந்தடிக்கலாம்.

களை, முளைக்கும் போதெல்லாம் அதன் இலைகளையும் தண்டுகளையும் வெட்டிவிட்டால் நிலத்திற்குக் கீழேயுள்ள விதைகள் பாதிக்கப்பட்டுக் கெட்டுவிடும். இப்படியும் இக் களையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம்.

கேள்வி.—புகையிலையில் புல்லுருவி தோன்றுவதைத் தடுக்க என்ன செய்யலாம்?

—திருப்பூர்

பதில்.—மூன்று வருடங்களுக்குத் தொடர்ந்தாற்போல், புல்லுருவிகளைப் பூக்கு முன் களைந்து எரித்து விடுதல் அல்லது புதைத்து விடுதலே சிக்கனமான முறை.

கேள்வி.—பருத்தியில் வேர்-வண்டு ஏராளமான சேதம் விளைவிப்பதைத் தடுக்கும் முறைகள் யாவை?

—திருப்பூர்.

பதில்.—டயல்டிரின் மருந்தை மூன்று காலன் தண்ணீருக்கு ஒரு அவுன்சு வீதம் கலந்து தெளிப்பது, எண்டிரின் மருந்தை 6¼ காலன் தண்ணீருக்கு ஒரு அவுன்சு வீதம் கலந்து நான்கு வாரங்களுக்குப் பிறகு, மூன்று வாரங்களுக்கு ஒரு முறை வீதம் மூன்று முறை தெளிப்பதும், வேர் வண்டுகளை ஒழிப்பதற்கு சிறந்ததாகும். அக்ரோசைட் பருத்தித்தூள் (Agrocide cotton dust) தூவுவதும் நல்ல பலனைத் தரும்.

கேள்வி.—நெல்வயல்களுக்கு ஃபாலிடால் தெளிப்பதால் அதனுடைய விஷத்தன்மை அரிசியிலும் தங்கியிருக்குமா?

—குளித்தலை

பதில்.—ஃபாலிடால் மருந்து பயிர் இளமையாக இருக்கும் போது அடிக்கப்படுகிறது. மேலும் ஃபாலிடால் மருந்தின் விஷத்தன்மை பதினைந்து நாட்களில் மறைந்து விடுகிறது. ஆகையால் அரிசியில் எந்த வித விஷத் தன்மையும் இருக்க வாய்ப்பே இல்லை.

கேள்வி.—எங்கள் வட்டாரத்தில் ராகி சாகுபடியாகும் நிலப்பரப்பு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் ஏராளமான பூச்சி நோய்கள் பயிரை நாசம் செய்வதுதான். ராகி சாகுபடி சிறப்படைய என்ன செய்யலாம்?

—உப்பிலியாபுரம்

பதில்.—உங்கள் வட்டாரத்தில் நாட்டு ரக ராகி சாகுபடி செய்யப்படுகிறது. இதை விட்டுவிட்டு வேளாண்மைத் துறை வழங்கும் புது ரகங்களை வாங்கிப் பயிர் செய்தால் பூச்சி நோய்களின் தாக்குதல் குறையும். உங்கள் பகுதியில் புது ரக ராகி பயிர் செய்யும் விவசாயிகள் நிலங்களில் பூச்சி நோய்கள் பாதிப்பதில்லை. ஆகவே புதுரகப் பொறுக்கு விதைகளை வாங்கி விதைக்கவும்.

பயிர் பூச்சிகளுக்கு...



போரில் தோல்வியே...

பாரீஸ் பூச்சி நாசினிக் கலவைகளின் மகோன்னத பூச்சிநாச சக்தியி னின்றும் பூச்சிகள் நழுவித் தப்புவது அசாத்யம். ஏனெனில் பாரீஸ் பூச்சி நாசினிகள் எல்லாவகைப் பயிர் பூச்சிகளையும் அடியோடு அழிப்பவையாகும்.

Parry's

பூச்சிநாசினி
கலவைகள்

பென்ஸிக்ளோர்
டி. டி. டி
மலாதியான்
எண்ட்ரின்
ஆல்டிரின்



மேலும் இதர, குறிப்பான விவரங்களுக்கு எழுதி விசாரிக்கவும் :
ஈஸ்ட் இந்தியா டிஸ்டில்லரீஸ் & ஷுகர் பாக்டரீஸ் லிமிடெட்.
(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
பெர்டிலைசர் இலாகா (I & F), டேர் ஹவுஸ், சென்னை-1

PZ-1304 TM

விவசாயிகளுக்கு வேளாண்துறையால் வழங்கப்படும் சில சலுகைகள்

நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் பூச்சி ஒழிப்பு இயக்கம் 1962-63.

(அரசாங்க ஆணை எண் 2622, 1962-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 9-ம் தேதியின் ஒரு சிறு குறிப்பு.)

இதன் பொருட்டு மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமாரி ரெவின்யூ மாவட்டங்களில் சிவப்புக் கம்பளிப் பூச்சியால் பாதிக்கப்படும் நிலக்கடலைப் பயிர்களில் பயிர் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவதற்காக விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகளை 50 சத விகித சலுகை விலையில் விற்பதற்கும், கடனாக வழங்குவதற்கும் (Subsidy-cum-loan) அரசாங்கம் ரூ. 1,20,000 அனுமதித்துள்ளது. இக் கடன் "தீவிர உரமிடும் திட்டத்தின்" கீழ் (Intensive Manuring Scheme) வழங்கப்படும் கடன் முறைப்படி வழங்கப்படும். பணம் கொடுத்து வாங்குபவர்களுக்கு நபர் ஒன்றுக்கு 10 ஏக்கருக்குப் போதுமானதும், ரூ. 100-க்கு மேற்படாததுமான பூச்சி மருந்துகள் வழங்கப்படும்.

ரூ. 1,20,000-ம் கீழ் கொடுத்துள்ள விவரப்படி கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்படும்.

			ரூ.
மதுரை கலெக்டர்	..	..	1,00,000
இராமநாதபுரம் கலெக்டர்		..	15,000
கன்னியாகுமரி கலெக்டர்		..	5,000
		மொத்தம்	1,20,000

இப் பூச்சிகளால் ஏற்படும் சேதத்தை தடுப்பதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கைகளை துண்டுப் பிரசுரங்கள், மற்றுமுள்ள விளம்பர சாதனங்கள் மூலம் பஞ்சாயத்து யூனியன்களுடன் கலந்து பரப்புவதற்காக, மதுரை துணை விவசாயத்துறை நெறியாளரிடம் ரூ. 1,000 ஒப்படைக்கப்படும்.

மேலும் சிவப்புக் கம்பளிப் பூச்சிகளின் முட்டைகள், கூட்டுப் புழுக்கள், கம்பளிப் புழுக்கள் இவைகளை பொறுக்கி அப்புறப்படுத்தும் பள்ளிச் சிறுவர்களுக்கு ஒரு சிறு கைமாறாக அளிப்பதற்கென ரூ. 2,500-ம் மதுரை துணை விவசாயத்துறை நெறியாளரிடம் ஒப்படைக்கப்படும். பஞ்சாயத்து யூனியனால் மேற்படி செலவை ஏற்க முடியாத நிலையில் தான் இந்த ரூ. 2,500-ஐ பயன் படுத்தலாம்.

தேவைப்படின் மேற்கூறிய மாவட்டங்களில், கடன் தொகை வழங்குவதற்கென 3 மாதங்களுக்கு மட்டும் ஒரு துணை தாசில்தாரையும் தக்காவி சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி அதற்குத் தேவையான ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையும் நியமித்துக்கொள்ள அரசாங்கம் அனுமதித்துள்ளது.

முன்னோடி விளக்குப் பொறிகள் வைப்பதற்கும், அதிக அளவில் விளக்குப் பொறிகள் வைப்பதற்கும் ஆகும் செலவிற்காக பல்வேறு பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பிரித்துக் கொடுப்பதற்கென ரூ. 2,500 இவ்வியக்கக் குழுவினிடத்தில் அரசாங்கத்தால் ஒப்படைக்கப்படும். பஞ்சாயத்து யூனியனால் விளக்குப் பொறிகளமைப்பதற்கான செலவை ஏற்கமுடியாத நிலையில்தான் இத்தொகை பயன்படுத்தலாம்.

மருந்தடிக்கப்படாத நிலத்திற்கும், புறம்போக்குகளுக்கும் அரசாங்க செலவில் மருந்தடிக்க அதிகபக்ஷ ரூ. 3,500 வரை செலவு செய்ய அனுமதித்துள்ளது.

விவசாயத்துறையினரால் மருந்து வழங்கப்பட்டதும், கடனுக்கும் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்களை ரெவின்யூ அதிகாரிகள் தயாரிப்பார்கள். "தீவிர உரமிடும் திட்டத்தின்" கீழ் வழங்கப்படும் கடனுக்கு விதிக்கப்பட்ட விதி முறைகளே இதற்கும் பின்பற்றப்படும்.

இரசாயன உரம் வாங்க கடன் வசதிகள்

அரசாங்க ஆணை எண் 2395, தேதி 16-7-62.

1962-63 வருட காலத்திற்கு தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் இரசாயன உரம் வாங்க கடன் தொகையாக ரூ. 60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைப் பங்கிடு செய்யப்பட்டுள்ள விபரம்கீழ் வருமாறு :—

			கடன் தொகை. ரூ.
(1) கரும்பு..	..	..	27,00,000
(2) புகையிலை	..	..	8,00,000
(3) தஞ்சாவூர் மாவட்டம்		..	1,00,000
(4) நெல், உரக் கலவைகளுக்கு			15,00,000

கரும்பு, நெல் முதலியவற்றிற்கான உரங்களுக்கும் உரக் கலவைகளுக்கும் ஒதுக்கிய தொகை சென்னை, தஞ்சாவூர் மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டக் கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புகையிலைக்கான தொகை சென்னை, தஞ்சாவூர், நீலகிரி நீங்கலாக இதர மாவட்டக் கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை பிரிக்கப்பட்டுள்ள விபரம் :—

நெல்.	கரும்பு.	உரக் கலவைகள்.	புகையிலை.
9,32,000	25,000	10,000	33,000

கடன் வழங்கும் விபரம்.

நெல்.—அம்மோனியம் சல்பேட் உரத்திற்கு ஒவ்வொரு வருக்கும் எக்கருக்கு ரூ. 35 வீதம் அதிகபட்சம் ரூ. 500-ம், சூப்பர்பாஸ்பேட் உரத்திற்குக் எக்கருக்கு ரூ. 15 வீதம் அதிகபட்சம் ரூ. 250-ம் கடனுக வழங்கப் படுகிறது. அதிகப்படி ஜாமீன்பேரில் ரூ. 750 வரை கடனுக வழங்கப்படும்.

கரும்பு.—அம்மோனியம் சல்பேட் உரத்திற்கு (யூரியா, சி.எ.என். அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், முதலியவை உள்பட) ஒவ்வொரு விவசாயிக்கும் எக்கருக்கு ரூ. 150 வீதம் அதிகபட்சம் ரூ. 500 சூப்பர் பாஸ்பேட் உரத்திற்கு எக்கருக்கு ரூ. 15 வீதம் அதிகபட்சம் ரூ. 250-ம் கடனுக வழங்கப்படுகிறது. அதிகப்படியான ஜாமீனின் பேரில் ரூ. 1,500 வரை கடன் வழங்கப்படும்.

நெல்லுக்கும், கரும்புக்கும் கலவை உரங்கள்.

ஸ்டாண்டர்டு நெ. 1 (12 : 6 : 0), நெ. 2 (12 : 6 : 6) உரக் கலவைகளுக்கென எக்கருக்கு ரூ. 50 வீதம் ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்சம் ரூ. 500 கடன் கொடுக்கப்படுகிறது. அதிகப்படி ஜாமீனின் பேரில் ஒவ்வொருவருக்கும் வழங்கக்கூடிய தொகை, ஸ்டாண்டர்டு நெ. 1 உரக் கலவைக்கு ரூ. 1,500-ம், நெ. 2 உரக் கலவைக்கு ரூ. 750-ம் ஆகும்.

ஒரு வருடத்தில் இக் கடன் விவசாயிகளிடமிருந்து மீட்கப்படுகிறது. இத் தொகைக்கு வட்டி வீதம் வருடத் திற்கு $5\frac{3}{4}$ சத வீதம். தவணை மீறிய தொகைக்கு $7\frac{1}{2}$ சத வீத வட்டி வாங்கப்படும்.

தீவிர உரத்திட்டம் பற்றிய இதர விஷயங்களை உங்கள் வட்டார வளர்ச்சி அதிகாரியைக் கேட்டறியலாம்.

அரசாங்க ஆணை எண் 2529, தேதி 13—7—62.

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு உருளைப் பயிருக்கிடும் பூச்சி மருந்துகள் தொடர்ந்து இன்னும் 6 மாதங்களுக்கு, அதாவது 1—7—62 முதல் 31—12—62 வரை, 50 சதவிகித சலுகை விலைக்கு வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

அரசாங்க ஆணை எண் 2413, தேதி 17—7—62.

1962-63-ம் வருட காலத்தில் சென்னை மாநிலத்தில் தென்னை, கமுகு பயிராகும் 12,000 எக்கர்களுக்கு இரசாயன உரங்கள் வாங்குவதற்கென குறுகிய காலக்கடன் தொகையாக ரூ. 12 லட்சம் அரசாங்கத்தால் ஒப்புறுதி யளிக்கப்பட்டுள்ளது. எக்கருக்கு ரூ. 100 வீதம் ஒவ்வொரு தென்னை அல்லது கமுகு சாகுபடியாளருக்கும் அதிக பட்சம் ரூ. 500 கடன் தொகையாக வழங்கப்படும்.

தென்னைக்குரிய தொகை, நீலகிரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கமுகுக்கான தொகை, கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

தீவிரச் சாகுபடித் திட்டத்தினல் உற்பத்திப் பெருக்கம்.

69669

(விவசாயப் பிரிவு)

தஞ்சை மாவட்டத்தில் இத் திட்டம் 1960-ஆம் ஆண்டில் எப்ரல் மாதம் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் துவக்கப் பட்டது. முதலாண்டில் 20 வட்டாரங்களிலும், இரண் டாவது ஆண்டில் 26 வட்டாரங்களில் இத் திட்டம் அமுலுக்கு வந்தது. முதலாண்டில் 36,638 தனிப்பட்ட உற்பத்தித் திட்டங்களும், இரண்டாவது ஆண்டில் 53,401 பண்ணை உற்பத்தித் திட்டங்களும் தயார் செய்யப்பட்டன. ஆகவே இத் திட்டத்தில் பல விவசாயிகள் ஈடுபடுத்தப் படுகிருர்கள். இத் திட்டத்தின் முக்கிய அம்சம் விவசாயி களுக்குத் திருந்திய முறை விவசாயத்தைப் பற்றிய நுண்ணறிவைப் புகட்டுதலே. திருந்திய விவசாயத்தைச் செய்முறையில் விளக்கப் பல நிரூபணங்கள் (Demonstrations) நடத்தப்படுகின்றன. சென்ற ஆண்டு எல்லா திருந்திய முறைகளையும் கொண்ட 973 நிரூபணங்கள் நடத்தப்பட்டன. விவசாய விரிவினை அலுவலர்கள் விவசாயிகளுக்குத் திருந்திய முறைகளைப் பற்றிய ஆலோசனைகளையும் அவர்கள் தங்கள் பயிர்களுக்குச் செய்ய வேண்டிய சாகுபடிக் குறிப்புகளையும் அளித்து அவர்களோடு ஒத்துழைக்கிருர்கள்.

தற்காலிக மதிப்பீட்டின்படி (Provisional Estimate) இத் திட்டம் அமுலாகி வரும் இடங்களில் 23·4 சத வீதம் கூடுதலான மகசூல் கிடைத்திருக்கிறதென்று தெரிகிறது. நடப்பு ஆண்டில் எக்கருக்கு சராசரி மகசூல் 1699 ராத்தலும், சென்ற ஆண்டில் எக்கருக்கு 1377 ராத்தலும் கிடைத்திருக்கிறது.

ஆகவே இம் மாபெரும் திட்டம் நம் நாட்டின் விவசாய உற்பத்தியைப் பெருக்கி வாழ்வை வளப்படுத்தும் என்பதில் ஐயத்திற்கிடமேதுமில்லை.

JL
J.211m,N62
N62.19

<u>பஞ்சாயத்து செய்திகள்</u>

நான் கண்ட கம்போஸ்டு

[வி. எஸ். சிவநேசன், (பி.காம்.), பெருந் தலைவர், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில், ஆற்காடு.]

வளங்குன்றிய நிலத்தை, வளம் பெறச் செய்ய வேண்டும். வளம்பெறச் செய்ய வழி, எருவிடுதல். நவீன விஞ்ஞான உலகில், யூரியா, அமோனியம் சல்பேட் போன்ற ரசாயன உரம் இடுகிறோம். இவற்றை மட்டும் உபயோகிப்பதால் நிலவளம், நாளடைவில் குன்றி, களர் நிலமாகி, பலனற்று விடுகிறது.

இதனைத் தவிர்க்க இயற்கை உரமும் போட வேண்டும். அதாவது தழை உரம், தொழு உரம், கம்போஸ்டு உரம். நம்மில் பலர் இந்த நூற்றாண்டிலும் கம்போஸ்டு என்றால் என்ன என்று கேட்கக் கூடியவர்கள் இருக்கின்றனர். உண்மையில் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லாதவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் தான். கம்போஸ்டு என்பதன் விவசாய விளக்கம்—மக்காத குப்பை, கூளம், கழிவுபொருள்கள், சருகு, சாணம், மூத்திரம் முதலியவைகளை ஒரு குழியில் போட்டு, மண்ணை கொண்டு மூடி வைத்தால், மூன்று (அல்லது) நான்கு மாதங்களில் மண்ணில் உள்ள நுண் அணுக்களால் மக்கி, நாற்றம், சுகாதாரக் கேடு இல்லாது கிடைக்கும் நல்ல உரம் -- இதைக் கழனியில் போட்டு பயிர் செய்வதால், மகசூல், ஒற்றைக்கு இரண்டு பங்காகக் காணலாம்.

எடுத்துக் காட்டாக, வடாற்காடு மாவட்டத்திலே, 36 பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்டுள்ள கிராமங்களில், பெரும்பாலாக பஞ்சாயத்துக்கள் உதவி கொண்டும், பெரு விவசாயிகள் ஊக்கங் கொண்டும் கம்போஸ்டு குழிக்கள் ஏற்படுத்தியுள்ளார். குறிப்பாக, என் பஞ்சாயத்து யூனியன் ஆற்காட்டில் உள்ளது. இதில் 35 பஞ்சாயத்துக்கள் அடங்கிய கிராமங்கள் உள்ளன. ஆணையாளரின் திறமையாலும் உழைப்பாலும் கிராம சேவக், உர இன்ஸ்பெக்டர் முதலியவர்களை ஊக்குவித்து, கடந்த மூன்று மாத காலத்தில் ஏறக்குறைய எல்லா கிராமங்களிலுமாக 320 கம்போஸ்டு குழிகள் இன்றைக்கு போடப்பட்டுள்ளன. குப்பை கூளங்கள், பார்க்கும் இடம் தோறும், வரவேற்காமல், நாகரீகமடைந்த சிறு நகரத்தைப்போல் தோற்றுவித்தன.

உதாரணமாக, எங்கள் யூனியனில் உள்ள ஒரு சிறு கிராமத்தை குறிப்பிடுகிறேன். அதுதான் குக்கந்தி என்ற கிராமம். மக்கள் தொகை 1,257. குடிசைகள் நிறைந்த தெருக்கள். ஆனால் குப்பைகள் எங்கு என்று வினவினால், எல்லாம் கம்போஸ்டு என்று கூறுகின்றனர்! மொத்தம் 69 கம்போஸ்டு திடல்கள் இருக்கின்றன. ஆண், பெண் இருபாலரும் இங்கு மிகவும் ஆர்வம் செலுத்துகின்றனர். கேட்டால் அவர்கள் "குப்பையால் கோடி பணம்" என்கிறார்கள். குப்பையைப் பேணி, பாதுகாக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அக்காலத்தில் பணத்தை புதைத்து வைத்து, புதையல் கிடைத்தது என்றார்கள். இப்பொழுது குப்பையை புதைத்து வைத்து, பணம் கிடைக்கிறது என்கிறார்கள்!

ஓர் முக்கிய அறிவிப்பு

நம் நாட்டிலுள்ள குதிரைகளுக்கு 'தென் ஆப்பிரிக்க நோய்' எனப்படும் ஓர் கொடிய தொத்து நோய், பரவி வருகின்றது. வட இந்தியாவில் ஆரம்பித்து அநேக விலையுயர்ந்த குதிரைகளைக் கொள்ளை கொண்ட இந்நோய் தமிழ் நாட்டிலுள்ள குதிரைகளையும் விரைவில் பாதிக்கக் கூடும். நோய் கண்டு விட்டால் அதிலிருந்து மீட்பது சாத்யமில்லை.

ஆனால் இந்நோய் வராமல் தடுக்க பிரதி தினமும் சைதாப்பேட்டை கால்நடை வைத்திய சாலையில் தடுப்பு ஊசிகள் இலவசமாகப் போடப்படுகின்றது. ஆகையால் குதிரைகள் வைத்திருப்போரும், ஜட்கா குதிரைகளையும் ஆஸ்பத்திரி வேலை நேரத்தில் கொண்டு போய் நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது. கழுதையினங்களுக்கும் தடுப்பு ஊசி போடப்படும்.

இதனால் அவரவர்கள் குதிரைகளை காப்ப தோடல்லாமல், நோய் மேலும் பரவாமல் தடுக்கவும் உதவுகின்றது

(கால்நடைத்துறை)

இலைகளின் அடிபாகத்திலிருந்து சததை உறுஞ்சி பூச்சிகள் பிழைக்கின்றன. 8 அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை 'காமெக்ஸேன்' டி 025 ஐத் தூவியாகிலும் அல்லது 'காமெக்ஸேன்' டபிள்யு. டி. பி. யை தெளித்தாகிலும் மிளகாய்ச் செடிகள் நல்ல முறையிலும் ஆரோக்கியத்துடனும் வளர வழி செய்யவும்.

மேற்கொண்டு விவரங்களை உங்களுக்கு அருகாமையில் உள்ள ஐ. ஸி. ஐ. காரியாலயத்தில் விசாரித்துப் பெற்றுக் கொள்ளவும்.

ICI

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா, பம்பாய், சென்னை, புது டில்லி

IPC-521 TM

"வழிகாட்டி"

(நாடகம்)

(கே. எஸ். ஆலம்கீர், விரிவிணைப் பகுதி, கோவை-3.)

காட்சி 6.

இடம் : மேஸ்திரி வீடு.

பாத்திரங்கள் : மேஸ்திரி, அழகு, ஆனையப்பன்.

மேஸ்திரி.—(வீட்டுக்குள் வந்து வீரத்தோடு உட்கார்ந்து) அடியே!......அழகு......அழகு......

அழகு.—ஏன் இப்படி வந்ததும் வராததுமா கத்தறீங்க? இப்போ என்ன குடியா முழுகிப் போச்சி?....

மேஸ்திரி.—குடி முழுகல்லேடி—குடி உயரப் போவுது ....வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடி உயரும்........

ஆனை.—(உள்ளே நுழைந்து) என்ன மச்சான் புதிர் போடறியே.

மேஸ்திரி.—ஆனை....எனக்கு அறிவு வந்திருச்சி...... சுயமரியாதை இல்லாமல் கிடந்த நான்......ஹ்ஹ ஹ்ஹா! இன்று கடமை வீரனாகி விட்டேனடா....

ஆனை.—என்ன மச்சான்? சினிமா பாத்திட்டு வந்தியா?

மேஸ்திரி.—இல்லே....நம்ப கிராமத்தைச் சீர்திருத்த உழவர் பெருமக்களுக்கு உதவி செய்யப் போறேன்.

அழகு.—தம்பி! இந்த ஊரு ஜனங்களுக்கு மண்டையிலே களிமண்ணுதான் இருக்கு. இவங்களைப் போய்த் திருத்தணும்னு முடியுமா?

ஆனை.—அப்படி என்னக்கா எல்லாரையும் சேர்த்து முட்டாளாக்குறியே.

மேஸ்திரி.—அப்படிச் சொல்லாதேடி........ஏழைங்க, அதனாலே பயப்படறுங்க....இல்லேன்னு ஜமீன்தாரை ஊதிப்புடுவாங்க ஊதி....

அழகு.—பின்னே என்னடா தம்பி....பயிர்லே பூச்சி விழுது. மருந்தடிங்கன்னு மாட்டேங்கறுங்க. எந்த மருந்துக்கும் அசருத மூட்டைப்பூச்சியே உங்க மச்சான் மேலே இருக்கிற வாடையிலேயே செத்துப் போவுது. மனுஷன் ரத்தத்தைக் குடிக்கிறமாதிரி பயிர் ரெத்தத்தை பூச்சி குடிக்குது; அதுக்கு மருந்தடிச்சிப் பயிரைக் காப்பாத்துங்கன்னு....அதைச் செய்யமாட்டேங்கறுங்களே.... அவங்களை என்ன சொல்றது. அவங்களுக்கு மண்டையிலே களிமண் இல்லாமே வேறே என்ன இருக்கும்?

மேஸ்திரி.—அடியே, சத்தமா திட்டாதடி அப்புறம் நம்மையே பாலிடால்லே போட்டு முக்கிடுவாங்க....

ஆனை.—எக்கா, இதுகூடவா அவங்களுக்குத் தெரியாம விவசாயம் பண்றுங்க. கையிலே காசு இருக்காது. அதனாலே மருந்தடிக்காமே இருப்பாங்க.

மேஸ்திரி.—இல்லேடா ஆனை. மருந்துங்கூட அப்படி அதிக விலையில்லையே.

அழகு.—கேளுடா தம்பி! மருந்துக்குக் கொஞ்சம் செலவாகுது. சரி அந்த செலவைவிட லாபம் அதிகமாகயில்லே கெடக்கிது.

ஆனை.—பின்னே என்ன கேடு?

மேஸ்திரி.—அதுதான் போகுது. நம்ம விவசாய டிபார்ட்டுமெண்டிலே இம்புருவடு சீடுன்னு சொல்லி நல்ல பொறுக்கு விதையாக் குடுக்கறுங்க. அதை வாங்கி விதைக்கலாமில்லே......

ஆனை.—மச்சான் நீ சொல்றே பொறுக்கு விதையின்னு, அதனாலே விவசாயிக்கு நல்ல லாபம் இருந்தாத்தானே வாங்குவான்?

அழகு.—லாபம் இல்லாமே என்ன? நம்ம கோயமுத்தூரிலே போய்ப் பாரு. ஒரு ஆளு விடாமே எல்லா விவசாயிகளும் பொறுக்கு விதையைத்தான் விதைக்கிறுன். பொறுக்கு விதையை விதைக்கும் போதும் எப்போதும் போல உழுது, உரத்தைப் போட்டு, விவசாய ஆபீசு விதையை மட்டும் வாங்கிப்போட்டா, 100 மூட்டை கிடைக்கிற இடத்திலே 115, 120 மூட்டை தானியம் அதிகமாக் கிடைக்குது; இதைத் தவிர பூச்சி, கீச்சுயெல்லாம் ஜாஸ்தியா வராது......அதுக்காக மருந்தடிக்க அதிகமாச் செலவளிக்க வேண்டியதில்லே..இவ்வளவு நன்மை இருக்குன்னு சொன்னுகூட இந்த ஊரு விவசாயிகளுக்கு ஒண்ணும் தெரியறதுல்லே......

ஆனை.—அக்கா......அக்காவ்......இவ்வளவு விஷயம் எப்படித் தெரியும் உனக்கு?...உன்னை டெமான்ஸ்ட்ரேட்டராப் போடலாம் போல இருக்கே......

மேஸ்திரி.—அப்படி நெனச்சுத்தான் இந்த வருஷம் அவளை விவசாய காலேஜ்லே சேர்க்கப் போனேன். அப்புறம் யோசிச்சேன்....அதிகம் படிச்சவளைக் கட்டி மேக்க நம்பளாலே முடியாதுன்னு, களுதை கடன்னு விட்டுட்டேன்.

அழகு.—(கோணிக்கொண்டே) சரி...சரி......வாங்க. சாப்பாட்டுக்கு ரொம்ப நேரமாச்சு....

மேஸ்திரி.—ஆமா ராத்திரி நேரத்திலே என்னத்தை ஆக்கியிருக்கே?

அழகு.—கோ. 6 ராகியிலே களி கிண்டியிருக்கேன்..

மேஸ்திரி.—அடிசக்கே....ரொம்ப இனிப்பா இருக்கும்.. அத்தோடே உடம்புக்கும் ரொம்ப சத்து இருக்கும்.. டேய் ஆண்....உன்னே மாதிரி பட்டாளத்துக்கார னுட்டம் ஆகனும்னு கோ. 6 ராகிலே சாப்பிடனும்டா..

ஆனே.—மச்சான் சாப்பாட்டுலே நீ பேசின லட்சியத்தை மறந்துட்டியே....

மேஸ்திரி.—மறக்குறதா....களியிலே கையிருந்தாலும் கடமையிலே கண்ணிருக்கும்....

ஆனே.—அதுதானே கேட்டேன்....மச்சான்! நான் உனக்கு ஹெல்ப்பா வர்ரேன்....

அழகு.—நானும் வீட்டு வேலையை முடிச்சுட்டு பொம்பளேங்க மகா நாடே கூட்டிப்புடறேன்.

மேஸ்திரி.—ஆஹா....ஆஹா....வெற்றி!! வெற்றி!!

காட்சி 7

இடம்: ஜமீன்தார் வீடு.

பாத்திரங்கள்: ஜமீன்தார், ராஜு.

(ஜமீன்தார் நாற்காலியில் உட்கார்ந்து கணக்குப் புஸ்தகங்களேப் புரட்டிக் கொண்டிருக்கிறார். அப்போது ராஜு உள்ளே நுழைந்து அவர் அருகில் வந்து நிற்கிறான்).

ஜமீன்தார்.—யாருடா அது....ஓ....ராஜுவா வாடாப்பா ....வா. என்னடா இது உம் இந்த விவசாய டிபார்டுமெண்டு ஆளுங்களோட பெரிய தொந்தரவாப் போச்சு! மனுஷனுக்கு சொந்த வேலையை கவனிக்கிறதுக்கே நேரமில்லே. இதுலே இவங்களோ சதா தொல்லே கொடுத்துக் கிட்டே இருக்காங்களே....ஆமா நீ கூட என்னமோ அந்த டிமான்ஸ்டிரேட்டரோட பேசினதாகவும் அவருகூட சுத்தரதாகவும் கேள்விப்பட்டேன். (அதட்டலுடன்) இதெல்லாம் என்னடா? இப்படித் திரியுறது உனக்கே நல்லா இருக்கா? (தாழ்ந்த குரலில்) இதோ பாருடா ராஜு....இதெல்லாம் நமக்கெதுக்குடா? நமக் கிருக்கிற சொத்து என்ன சொகமென்ன இதை யெல்லாம் யோசிக்காமே....

ராஜு.—அப்பா கொஞ்சம் யோசிச்சு நிதானமா பேசுங்கப்பா.

ஜமீன்தார்.—நிதானமா! இந்த டெமான்ஸ்டிரேட்டர் இவ்வளவு தூரத்துக்கு இடைஞ்சல் பண்ணுவான்னு நான் நெனேக்கவே இல்லே.

ராஜு.—நானும் பழைய ஆளுங்களேப் போல இந்த ஆளும் இருப்பான், பயமுறுத்திப் பார்க்கலாமுன்னு நெனச் சேன். ஆனு இவரு ரெம்ப தைரியசாலியா இருக்காருப்பா.

ஜமீன்தார்.—உம்..தையரியசாலியாவது மண்ணுங்கட்டியா வது. பாரு இன்னும் கொஞ்ச நாளுலே அவனுக்கு என்ன நடக்குதுன்னு.

ராஜு.—அப்பா அந்த பனங்காட்டு நரி இந்த சலசலப்புக் கெல்லாம் அஞ்சாது....

ஜமீன்தார்.—டேய் இந்த ஜமீன்தார் வேதநாயகத்தை நீயே இன்னும் புரிஞ்சிக்கிலே....

ராஜு.—(மெதுவாக மனதிற்குள்) உங்களெப் பத்தி எனக்குத் தெரியாதா என்ன. (உரத்த குரலில்) அது கிடக்கட்டும் பா, நாமும் எத்தனே நாளெக்கித்தான் நம்ம விவசாயிகளே அறியாமை இருட்டிலே அடக்கி வைக்க முடியும்? அவங்களுக்கு நாம் சுதந்திரமும் உரிமையும் கொடுக்கனும். அறியாமை நீங்கி அவர் களுக்கு அறிவுக்கண் திறந்துவிட்டால் நாம் போக வேண்டிய மூலேயே வேறு அப்பா வேறு.

ஜமீன்தார்.—(கோபத்தோடு) எண்டா அயோக்கியப் பயலே, சுயநினேவோடதான் பேசுறியா இல்லே அந்த அதிகப் பிரசங்கியோட விஷப்பேச்சு உம் மூளையைக் கூட கெடுத்துருச்சா.

ராஜு.—அப்பா....

ஜமீன்தார்.—(சாந்தக்குரலில்) டேய் இங்கே பார்ரா ராஜு. உங்க அப்பனுக்கே விரோதமா நடக்குறதுன்னு நீ தீர்மானம் பண்ணிட்டியா....உம்.. இப்படியெல்லாம் நான் பாடுபட்டு சம்பாதிக்கிறேனே......எல்லாம் யாருக்காகடா......உனக்காகத்தானே? கேளுடா சொல்றேன். என்னிக்கும் இருக்கிற நிலேமையை மாற்றி புரட்சி பண்ணனும்னு சொல்லுற பசங்க ளெல்லாம் கொஞ்ச நாளேக்குத்தாண்டா வீரம் பேசு வானுங்க, அப்புறம் அவனுங்களே காலேவாரி விட்டுடு வானுங்க. அதனுலேதான் சொல்றேன் அந்தப் பசங்களே நம்பாதேன்னு.

நம்ம ஊர் ஜனங்களுக்கு நன்மை செய்யுறதுக்கு நான் பெரிய பெரிய திட்டமெல்லாம் போட்டிருக்கேன். எல்லாம் போகப் போக தெரிஞ்சுகிடுவே பாரேன். உம்..உனக்கு எங்கேஜ்மெண்ட் நிறையா இருக்குமே போய்ப் பாரு. (தனக்குள்ளே) பொளேக்கத் தெரியாத பய....

(தொடரும்)

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்
(No. C. 1206691/61— 14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள் :—

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்லில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினுல் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.

61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலை விவரம் :—

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு — — —	280	ரூபாய்

செயலாளர்கள் :—

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :—

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

1962-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதக் காலநிலை அறிக்கை

(ம. வி. ஜயராமன், விவசாயக் காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை-3.)

இம்மாத முதல் நாளன்று பருவமழை தமிழ்நாடெங்கும் வறட்சி நிலவியது. மறுநாள் முதல் ஐந்து நாட்களுக்கு சிற்சில இடங்களில் மழை பெய்தது. 7-ம் தேதியன்று மேற்கு வங்கக் கடலில் ஒரு மெல்லிய குறையழுத்தம் தோன்றி கேரளத்தில் பருவமழை வலிவடைந்தமையில், தமிழ் நாட்டில் 7, 8-ம் தேதிகளில் ஆங்காங்கு மழை பெய்தது. அதன் பின்னர் ஆறு நாட்களில் சிற்சில இடங்களில் மழை பெய்து 14, 15, தேதிகளில் தமிழ் நாடெங்கும் வரட்சி நிலவியது. அதன் பிறகு ஆறு நாட்கள் சிற்சில இடங்களில் மழை இருந்தது. ஆனால் 18ம் தேதியன்று ஆங்காங்கு மழை பெய்தது. 21-ம் தேதியன்று ஒரு மெல்லிய குறையழுத்தப் பிரதேசம் குமரிக்கரையருகே தோன்றி மறுநாள் மறைந்தது, பின்னர் ஒரு குறையழுத்தப் பிரதேசம் இந்தியாவின் மத்தியப் பகுதிகளில் நிலவியது. ஆகையால் 22-ம் தேதி முதல் இம்மாத முடிவு வரை தமிழ்நாட்டில் ஆங்காங்கு மழை பெய்தது. ஆனால் 24-ம் தேதியன்று சிற்சில இடங்களில் மழை பெய்தது.

கால நிலையும் விவசாயமும்.—செங்கல்பட்டு மாவட்டத்தில் நல்ல மழை பெய்தமையால் நெல், நிலக்கடலை ஆகிய பயிர்கள் மிகவும் பயனடைந்தன. வட ஆற்காட்டிலும் வலுத்த மழை பெய்தமையால் கரும்பு முதலிய பயிர்களுக்கு மிகவும் பயனளித்தது. இங்கு கரும்புப் பயிரை கருப்பு மூட்டைப்பூச்சி (Aleurodis) சிறிதளவு தாக்கிற்று. தென் ஆற்காட்டில் பெய்த மழை நிலக்கடலை பயிருக்கு மிகவும் நன்மை பயத்தது. இங்கு நிலக்கடலைப் பயிரை சுருள்புச்சி சிறிதளவு தாக்கியது. இம்மழை மானாவாரி நிலங்களில் நிலக்கடலை விதைக்கப் பெரிதும் பயன் பட்டது. எள் பயிரைச் சில இடங்களில் அழுகல்நோய் தாக்கிற்று.

தஞ்சை திருச்சி மாவட்டங்களில் மழை இம்மாத முற்பகுதியில் பெய்யாததால் குறுவைப் பயிர் வளர்ச்சி குன்றியது. பிற்பகுதியில் பெய்த மழை நெற்பயிருக்கு மிகவும் பயன்பட்டது. இங்கு நெற்பயிரில் குருத்துப் மிச்சி கண்டது. சில இடங்களில் தத்துப் பூச்சியும் இப்பயிரை தாக்கிற்று.

மதுரை மாவட்டத்தில் பெய்த மழை மானாவாரிப் பயிர்களுக்குப் பெரிதும் உதவிற்று. ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் மழை போதிய அளவுள்ளதாக இல்லை. சில இடங்களில் நிலங்கள் பண்படுத்தப்பட்டன. கன்யாகுமரி மாவட்டத்தில் மழை சற்று அதிகம். இதனால் முற்றிய நெல்பயிர் சிறிதளவு பாதிக்கப்பட்டது. இங்கு நெற்பயிரை குருத்துப்பூச்சி, தத்துப்பூச்சி ஆகியவை சிறிதளவு தாக்கின.

கோவை சேலம் மாவட்டங்களில் மழை பரவலாக பெய்தமையால் மானாவாரிப் பயிர்கள் விதைக்க உதவிற்று பொள்ளாச்சி பகுதிகளில் நிலக்கடலை அறுவடையாகியது. ஆனால் மகசூல் மிகக் குறைவு. கோவை மாவட்டத்தில் தோட்டங்களில் பருத்தி விதைக்கப்பட்டது. இப்பயிரை அசு, வண்டுகள் (Fleabeetles, Thrips) ஆகியவை தாக்கின.

நீலகிரி மாவட்டத்தில் மழை உருளைக்கிழங்கு பயிருக்குப் பயன்பட்டது. இப்பயிரை வெட்டுப் புழுக்களும், அழுகல் நோயும் (Late blight) மிதமாகத் தாக்கின, இம்மழை தோட்டங்களுக்குப் பெரிதும் பயன்பட்டது.—

இம்மாதக் குறிப்பிட்ட மழை அளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
22—8—1962	திருவண்ணாமலை	4·33
23—9—1962	நுங்கம்பாக்கம்	2·36
25—8—1962	திண்டிவனம்	3·91
27—8—1962	திரூர்	2·98
28—8—1962	நாகப்பட்டினம்	2·36
28—8—1962	மீனம்பாககம்	2·36
31—8—1962	மதுரை	2·36
31—8—1962	திருப்பதிசாரம்	2·95

பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்)

பிராந்திய பெயர். (1)	ஆகஸ்ட்டு மாத மழை யளவு. (2)	சராசரி யிலிருந்து மாறுபாடு. (3)	குறிப்பு. (4)
வட பிராந்தியம்	8·3	+3·1	மிக அதிகம்
கீழ்க்கரை பிராந்தியம்	7·3	+2·9	மிக அதிகம்.
மத்திய பிராந்தியம்	3·9	+0·7	அதிகம்
தென் பிராந்தியம்	2·2	+0·7	அதிகம்
மலைப் பிராந்தியம்	6·8	+0·3	சற்று அதிகம்.

1962-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதக் காலநிலை அறிக்கை மழையளவுகள் (அங்குலத்தில்).

இடத்தின் பெயர் (1)	ஜூன் மாத மொத்த மழையளவு (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	1962-ம் ஜனவரி 1-ம் தேதியிலிருந்து மொத்த மழையளவு. (4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்)	9·4	+4·8	25.1
திரூர்குப்பம் *	9·3	+3·1	22.1
வேலூர்	6·1	+0·3	21·1
குடியாத்தம் *	8·2	+4·2	19·5
கீழ்க்கரைப் பிராந்தியம்.			
பாலூர் *	6·4	+1·1	11·8
திண்டிவனம் * ..	10·0	+4·4	19 1
கடலூர்	8·7	+3·9	13.8
நாகப்பட்டணம் ..	7·8	+4·8	14·4
ஆடுதுறை *	5·2	+1·9	17·7
பட்டுக்கோட்டை * ..	5·9	+	17·7
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	10·4	+3·8	24·9
கோயம்பத்தூர் * ..	0·6	—0·2	12·1
கோயம்புத்தூர் ..	0·8	—0·4	11·5
திருச்சிராப்பள்ளி ..	3·7	—0·3	11·2
தென் பிராந்தியம்.			
மதுரை	5·2	+1·2	11·0
பாம்பன்	0·1	—0·5	7·7
கோவில்பட்டி *	1·0	—0·1	8·8
பாளையங்கோட்டை ..	0·7	†	10·7
அம்பாசமுத்திரம் * ..	0·7	+0·3	17·6
நாகர்கோவில் * ..	5·8	+3·5	27·6
கன்னியாகுமரி * ..	1·6	+0·4	16.1
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல் ..	7·0	†	32·4
கூனூர் *	5·6	+3·2	27·5
உதகமண்டலம் * ..	6·2	—3·2	36·5
நஞ்சநாடு *	8·4	+1·2	46·3

குறிப்பு.—* சென்னை விவசாய இலாக்காவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

† சரியான மதிப்பு எண் = +0·01.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1962

திரு. எம். எஸ். சிவராமன், I.C.S. அவர்கள் ஐபோமியா செடி நடும் விதத்தைக் கூறுகிறார்.



விருத்தாசலம் தாலுக்காவில் ஹெலிகாப்டர் விமானம் மூலம் 15,000 ஏக்கர்களில் சிவப்புக் கம்பளிப் பூச்சிக்கு மருந்தடிக்கும் பணி ஆவணி மாதம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது